(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 7(2).]

# பாராளுமன்றம்

## 7 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2012 ஒற்றோபர் 26 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2012 நவர்பர் 14, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1407/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் புத்தசாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம் எப்போது நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது என்பதையும்;

(ii) கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையையும்;

(iii) திணைக்களத்தின் தற்போதைய பணியாட்டொகுதியினரின் எண்ணிக்கையையும்;

(iv) பதவியணியில் நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கையையும்;

(v) பணியாட்டொகுதியினருக்கு உரித்தாக உள்ள சம்பளங்கள் மற்றும் ஏனைய ஊதியங்களையும்

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் அரசியல் மயப்படுத்துகை குறித்து ஐ.நா அறிக்கை குறிப்பிட்டுள்ளதா என்பதையும் அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1636/ '11

கௌரவ புத்திக பதிரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) சுனாமியால் அழிவடைந்த காலி மகமோதரை மருத்துவமனையை மீளக் கட்டியெழுப்புவதற்காக ரூபா 3000 மில்லியன் வெளிநாட்டு உதவித் தொகை ஒன்று கிடைத்து ஐந்து ஆண்டுகளுக்கும் மேல் கடந்துள்ளதென்பதையும்;

(ii) இதுவரை அதன் நிர்மாணப் பணிகள் அத்திவாரத்துக்கு மாத்திரம் மட்டுப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) இந்த மருத்துவமனையை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தகாரருக்கு அரசினால் வரிச் சலுகை வழங்கப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மருத்துவமனையை நிர்மாணிப்பதற்காக ரூபா 3000 மில்லியன் தொகையை வழங்கிய நாடு யாதென்பதையும்;

(ii) ஒப்பந்தகாரர் மேற்படி தொகையைப் பெற்றுக்கொண்டு மருத்துவமனைக் கட்டடத்தை நிர்மாணிக்காமை தொடர்பாக ஆராயும் பொருட்டு சுகாதார அமைச்சினால் ஏதேனும் விசாரணை மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதன் பெறுபேறு யாதென்பதையும்;

(iv) விசாரணை மேற்கொள்ளப்படவில்லையெனின், அதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஈ) (i) மீண்டும் வெளிநாட்டுக் கடனைப் பெற்று இதன் நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்கான ஏதேனும் திட்டம் உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அக் கடன்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) அக்கடன் தொகையைப் பெற்றுக்கொள்ளும் நிறுவனம் மற்றும் நாடு யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

1871/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— தொலைத் தொடர்புகள், தகவல் தொழில் நுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) யாழ்ப்பாண ரெலிகொம் கட்டிடத்தை புனரமைப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு;

(ii) இக் கட்டிடத்தை புனரமைப்பதற்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டிருப்பின் இதற்காக விண்ணப்பித்தவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை;

(iii) கேள்விப் பத்திரங்களின் பிரகாரம் ஆகக்குறைந்த விலை மனுக்களின் கீழ் விண்ணப்பித்தவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை;

(iv) மேற்படி கேள்விப் பத்திரம் வழங்கப்பட்ட நபரின் அல்லது நிறுவனத்தின் பெயர் மற்றும் கேள்விப் பத்திரம் வழங்கப்பட்ட பணத் தொகை யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தற்போது இக்கட்டிடத்தின் புனரமைப்புப் பணிகள் முடிவடைந்துள்ளதா;

(ii) அவ்வாறாயின் இதற்கு செலவாகிய முழுச் செலவினம் எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2097/ '11

கௌரவ சஜித் பிரேமதாச,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 1999 ஆம் ஆண்டில் அரசின் முன்னுரிமையான விடயங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் 2005 ஆம் ஆண்டின் வேலையில்லா பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பட்டதாரிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவர்களின் ஆட்சேர்ப்பு, பதவி உயர்வுடன் கூடிய திட்டவட்டமான ஆட்சேர்ப்பு நடைமுறையின் கீழ் மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(iii) மேற்கூறியவாறு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட மொத்த பட்டதாரிகளில், முறைசார்ந்த நடைமுறைக்கேற்ப பதவியுயர்வு பெற்றுக்கொள்வதற்கு இயலுமாயிருந்த பட்டதாரிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அரச சேவைக்கு பிரவேசிக்கின்ற அலுவலக பணியாளர் ஒருவருக்குக் கூட பதவிநிலைத் தரத்திற்கு பதவியுயர்வு பெற்று ஓய்வு பெறக்கூடியவாறான செயல் நடைமுறையொன்றைக் கொண்ட அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பட்டதாரிகளுக்கும் திட்டவட்டமான நடைமுறையொன்றுடன் கூடிய பதவியுயர்வு வழங்கும் வேலைத்திட்டமொன்றைத் தயாரிப்பாரா என்பதையும்;

(v) ஆமெனில், இதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2350/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2011ஆம் ஆண்டாகும் போது சிறுவர் அபிவிருத்தி மகளிர் அலுவல்கள் அமைச்சின் கீழ் பதிவுசெய்யப் பெற்றுள்ள பாலர் பாடசாலை ஆசிரியர் பயிற்சிப் பாடநெறிகள் யாவை என்பதையும்;

(ii) அந்தப் பாடநெறிகளை நடத்தும் நிறுவனங்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள பாலர் பாடசாலை ஆசிரியர் பயிற்சிப் பாடநெறியை பின்பற்றியுள்ள பாலர் பாடசாலை ஆசிரியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாகாணம் அல்லது மாவட்டத்திற்கேற்ப வெவ்வேறாக எவ்வளவு என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2539/ '12

கௌரவ அனுர திசாநாயக்க,— சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தின் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையின் ஒவ்வொரு அங்கத்தவரும் 2009 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை மேற்கொண்டுள்ள வெளிநாட்டுப் பயணங்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு பயணத்திற்குரிய நாடுகள், பயணத்தின் நோக்கம், பெற்றுக்கொண்ட பெறுபேறுகள் ஒவ்வொரு பயணத்திற்கும் ஏற்ப தனித்தனியே யாவை என்பதையும்

(iii) ஒவ்வொரு பயணத்திற்குமென அந்நதந்த நபர்களுக்காக செலவிடப்பட்ட பணத்தொகை தனித்தனியே எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2557/ '12

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006 முதல் இற்றைவரை தரைப்படை, கடற்படை மற்றும் வான்படைச் சேவைகளை விட்டுத் தப்பிச் சென்றுள்ளவர்களின் எண்ணிக்கைகளை வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) இவ்வாறு படைகளை விட்டுத் தப்பிச் சென்றுள்ளவர்களை கைதுசெய்வதற்கு சட்ட ரீதியான அதிகாரத்தைக் கொண்ட அதிகாரிகள் யாவரென்பதையும்;

(iii) 2006 முதல் 2011 டிசம்பர் 31ஆம் திகதி வரை கைதுசெய்யப்பட்டுள்ள, தப்பிச் சென்ற முப்படைகளினதும் அங்கத்தவர்களின் எண்ணிக்கை வருடாந்த ரீதியில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) 2012 சனவரி 01 முதல் மார்ச் 31ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் முப்படைகளை விட்டுத் தப்பிச் சென்றவர்களை கைதுசெய்வதற்கு சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்ட பிரதேசங்கள் யாவையென்பதையும்;

(v) மேற்படி சுற்றிவளைப்புகளின் மூலம் கைதுசெய்யப்பட்ட ஆட்களின் பெயர்பட்டியலை சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2855/ '12

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை இராணுவத்தில் தற்போது கடமையாற்றிக்கொண்டிருக்கும், இராணுவ நடவடிக்கை காரணமாக அங்கவீனமுற்ற படைவீரர்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இராணுவத்திலுள்ள படைவீரர்களும் உத்தியோகத்தர்களும் ஓய்வு பெறுவதற்காக பூர்த்தி செய்ய வேண்டிய குறைந்தபட்ச சேவைக்காலம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இராணுவ சேவையிலிருந்து ஓய்வு பெறுவதற்கு பூர்த்தி செய்யவேண்டிய குறைந்தபட்ச சேவைக்காலத்திற்கு முன்னர் ஓய்வு பெறுவதற்கு தற்போது கடமையில் ஈடுபட்டுள்ள அங்கவீனமுற்ற படைவீரர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் முடியுமா என்பதையும்;

(ii) ஆமெனின், அது எவ்வாறு என்பதையும்;

(iii) அவ்வாறின்றேல், அங்கவீனமுற்ற இராணுவ உத்தியோகத்தர்களுக்கும் படை வீரர்களுக்கும் இவர்களது தனிப்பட்ட விருப்பத்தின் பேரில் ஓய்வு பெறுவதற்கு பொருத்தமான கொள்கையொன்றை வகுப்பது உசிதமானதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1892/ '11

கௌரவ புத்திக பதிரண,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மனம்பிட்டியவிலிருந்து வெலிகந்த வரையிலான புகையிரதப் பாதைக்குரிய ஒதுக்கக் காணிகளை துண்டுகளாக பிரித்து விற்பனை செய்யும் மோசடி வியாபாரமொன்று இடம்பெறுகின்றதென்பதையும்;

(ii) இவ்வாறு சட்டவிரோதமான முறையில் காணிகளைப் பெற்றுக்கொடுத்து நிர்மாணிப்புகளை மேற்கொள்வதற்கு இடமளிப்பதன் மூலம் புகையிரத விபத்துக்கள் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இது சம்பந்தமாக முறையான விசாரணையொன்றை நடாத்தி இந்நிலைமையை தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படுமெனில், இதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2155/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 ஆம் ஆண்டினுள் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்குவதாக தீர்மானிக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி காணிகள் அமைந்துள்ள இடங்கள் மற்றும் காணியின் அளவு தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) முதலீட்டாளர்களுக்கு மேற்படி ஒவ்வொரு காணியையும் வழங்குவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி காணிகள் வழங்கப்படும் கால எல்லை மற்றும் காணிகள் வழங்கப்படும் அடிப்படை யாதென்பதையும்;

(v) வழங்கப்பட்ட அல்லது வழங்கப்படும் ஒவ்வொரு காணிக்காகவும் கிடைத்த பணம் அல்லது கிடைப்பதாக எதிர்பார்க்கப்படும் பணம் எவ்வளவென்பதையும்;

(vi) காணிகள் வழங்குவதன் மூலம் கிடைக்கப்பெறும் பணம் எத்தகைய பணிகளுக்காக பயன்படுத்தப்படும் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2204/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கடந்த ஐந்து ஆண்டுகளில் இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தொடர்பாக,

(i) பயன்படுத்தப்பட்ட மொத்த மூலதனம் மற்றும் ஒதுக்குகள் என்பன யாவையென்பதையும்;

(ii) இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்;

(iii) மொத்த பணியாட்டொகுதியினர் எண்ணிக்கை, கிரயம் மற்றும் ஒரு பணியாளருக்கான இலாபம் போன்றன யாதென்பதையும்;

(iv) கழிப்பனவுகள் அல்லது அரசாங்கத்திற்கு செலுத்திய அறவீடுகள் யாதென்பதையும்

வருடாந்த அடிப்படையில் கூறுவாரா?

(ஆ) (i) இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபத்தின் ஏதாவது பணம் கடந்த 5 ஆண்டு காலங்களில் பதிவழிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், பதிவழிக்கப்பட்ட தொகை யாதென்பதையும்;

(iii) என்ன காரணத்திற்காக அவ்வாறு செய்யப்பட்டது என்பதனையும்;

(iv) அவ்வாறு எப்போது நடைபெற்றது என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் கடந்த 5 ஆண்டு காலப்பகுதியிலே அது பணம் பயன்படுத்திய விதத்தை விட சிறந்த முறையில் வினைத்திறனாக பயன்படுத்தியிருக்க முடியுமா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அது எவ்வாறு செய்யப்படுகின்றது என்பதையும்;

(iii) இன்றேல், ஏன் அவ்வாறு செய்யப்படவில்லை என்பதையும்

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2260/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2012 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தின் மூலம், பல்கலைக்கழக மாணவர்களுக்கு தற்போது வழங்கப்படுகின்ற மஹாபொல புலமைப் பரிசில் தொகையை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2540/ '12

கௌரவ அனுர திசாநாயக்க,— சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (ஸ்ரீ லங்கா) கம்பனியின் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் 2009 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை மேற்கொண்டுள்ள வெளிநாட்டு பயணங்களின் எண்ணிக்கை ஒவ்வாரு நபருக்கும் ஏற்ப தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு பயணத்திற்குமுரிய நாடுகள், பயணத்தின் நோக்கம், பெற்றுக்கொண்ட பெறுபேறுகள் தனித்தனியே யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பயணத்திலும் பங்குகொண்ட ஒவ்வொரு நபருக்காகவும் செலவிடப்பட்ட தொகை தனித்தனியே எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2624/ '12

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2007 இல் எரிபொருள் விலை அதிகரித்த போது,

(i) மக்களுக்கு டீசல் மற்றும் மண்ணெண்ணெய் மானியங்கள் வழங்கப்பட்டனவா என்பதையும்;

(ii) அவ்வாறெனின், குடும்பமொன்றுக்கு வழங்கப்பட்ட மண்ணெண்ணெய் மானியத்தின் பெறுமதி எவ்வளவு என்பதையும்;

(iii) மண்ணெண்ணெய் மானியத்தை வழங்குவதற்காக பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்ட முறையியல் யாதென்பதையும்;

(iv) அந்த மண்ணெண்ணெய் மானியத்தை வழங்க 2008, 2009, 2010 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(v) டீசல் மானியம் வழங்கப்பட்டவர்கள் யாவர் என்பதையும்;

(vi) மீனவர்களுக்கு டீசல் மானியம் வழங்கப்படுமென வாக்குறுதி வழங்கப்பட்டிருந்ததா என்பதையும்;

(vii) அவ்வாறெனின், 2008, 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் மீனவர்களுக்கு டீசல் மானியம் வழங்க ஒதுக்கப்பட்ட பணத் தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்கூறியவாறு டீசல் மற்றும் மண்ணெண்ணெய் மானியங்கள் வழங்கப்படவில்லையெனில், 2007 தொடக்கம் இதுவரை மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளார்கள் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இன்றேல், ஏன்?

2324/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2004 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அனுராதபுரம் மற்றும் பொலனறுவை மாவட்டங்களில் அறிக்கையிடப்பட்ட சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை வருடாந்த ரீதியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) வட மத்திய மாகாணத்தில் தீவிரமாக பரவியுள்ள சிறுநீரக நோய்க்கான திட்டவட்டமான காரணங்களை இனங்காண்பதற்கு பயன்படுத்தப்பட்ட முறையியல் யாதென்பதையும்;

(iii) இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மூலம் மேற்படி நோய் பரவுதல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், மேற்படி நோயை கட்டுப்படுத்துவதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) சிறுநீரக நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்குத் தேவையான வசதிகளை கொண்டுள்ள மருத்துவமனைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் கண்டி பொது வைத்தியசாலையிலும் காணப்படுகின்ற சிறுநீரக நோயாளர்களுக்குத் தேவையான சத்திரசிகிச்சைகளை மேற்கொள்ளக்கூடிய வாட்டுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) சத்திர சிகிச்சைகளின் பின்னர் தேவையான வசதிகளின் கீழ் அரச மருத்துவமனைகளில் தங்கவைத்துக்கொள்ளக் கூடிய சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) சந்தையில் நிலவுகின்ற தட்டுப்பாடு காரணமாக தற்போது அதிக விலையில் விற்பனை செய்யப்படுகின்ற சிறுநீரக நோயாளர்களுக்குத் தேவையான மருந்துகளை போதியளவில் அரச மருத்துவமனைகளுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2012 நவம்பர் 15, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1893/ '11

கௌரவ புத்திக பதிரண,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் கெக்கனதுர எல்லகந்த வாவியின் குளக்கட்டின் சில இடங்களிலிருந்து நீர் கசிவதற்கு ஆரம்பித்துள்ளதால் அருகாமையில் அமைந்துள்ள கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளனர் என்பதையும்;

(ii) வாவியை மறுசீரமைக்கும்போது சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட முறைகேடுகளின் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதென விவசாயிகள் குற்றஞ்சாட்டுகின்றனர் என்பதையும்;

(iii) பிரதேச மக்கள் இந்த நிலைமை தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு அறிவித்திருந்த போதிலும் இதுவரை அதற்கான தீர்வு கிடைக்கவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) கெக்கனதுர எல்லகந்த வாவியின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளின்போது ஏற்பட்டுள்ள முறைகேடுகள் தொடர்பாக முறைசார்ந்ததொரு விசாரணையை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) வாவியை மீண்டும் மறுசீரமைத்து நீர் கசிவினை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில், இதற்காக எடுக்கப்படும் காலம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2158/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குளியாப்பிட்டிய கல்வி வலயத்தில் பண்டுவஸ்நுவர கல்விக் கோட்டத்தில் ஹெட்டிபொல மாதிரி முதல் நிலைப்பாடசாலையில் பலநோக்கு மும்மாடிக் கட்டிடமொன்று அமைக்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) இதற்கான மதிப்பீட்டுத் தொகை யாதென்பதையும்;

(iii) இதற்கான நிதி ஏற்பாடுகளைப் பெற்றுக்கொண்ட முறை யாதென்பதையும்;

(iv) இந்நிர்மாணப் பணிகள் அரச நிதி ஏற்பாட்டில் செய்யப்படாவிடின் நிதி ஏற்பாடுகளை வழங்கியவர்களின் பெயர்கள், முகவரிகள் யாவையென்பதையும்;

(v) இந்நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(vi) உடன்படிக்கையின் படி நிர்மாண வேலைகள் முடிவடைய வேண்டிய திகதி யாதென்பதையும்

(vii) இப்போது இந்நிர்மாண வேலைகள் முடிவடைந்துள்ளதா என்பதையும்;

(viii)நிர்மாணப்பணிகள் முடிவடையவில்லையெனின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2205/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கடந்த ஐந்து ஆண்டுகளில் அரசாங்க மரக் கூட்டுத்தாபம் தொடர்பில்,

(i) பயன்படுத்தப்பட்ட மொத்த மூலதனம் மற்றும் ஒதுக்குகள் என்பன யாவையென்பதையும்;

(ii) இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்;

(iii) மொத்த பணியாட்டொகுதியினர் எண்ணிக்கை, கிரயம் மற்றும் ஒரு பணியாளருக்கான இலாபம் போன்றன யாதென்பதையும்;

(iv) கழிப்பனவுகள் அல்லது அரசாங்கத்திற்கு செலுத்திய அறவீடுகள் யாதென்பதையும்

வருடாந்த அடிப்படையில் கூறுவாரா?

(ஆ) (i) அரசாங்க மரக் கூட்டுத்தாபத்தின் ஏதாவது பணம் கடந்த 5 ஆண்டு காலங்களில் பதிவழிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், பதிவழிக்கப்பட்ட தொகை யாதென்பதையும்;

(iii) என்ன காரணத்திற்காக அவ்வாறு செய்யப்பட்டது என்பதனையும்;

(iv) அவ்வாறு எப்போது நடைபெற்றது என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் கடந்த 5 ஆண்டு காலப்பகுதியிலே அது பணம் பயன்படுத்திய விதத்தை விட சிறந்த முறையில் வினைத்திறனாக பயன்படுத்தியிருக்க முடியுமா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அது எவ்வாறு செய்யப்படுகின்றது என்பதையும்;

(iii) இன்றேல், ஏன் அவ்வாறு செய்யப்படவில்லை என்பதையும்

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2325/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தொண்டர் சேவையில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் ஆசிரிய உதவியாளர்களாக கல்வி அமைச்சின் கீழ் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்பதை அவர் அறிவாரா ?

(ஆ) (i) தொண்டர் ஆசிரியர்கள் ஆசிரிய உதவியாளர்களாக ஆட்சேர்க்கப்பட்ட வருடம் யாது;

(ii) தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள ஆசிரிய உதவியாளர்களின் எண்ணிக்கை யாது;

(iii) ஆசிரிய சேவை 3-II தரத்துக்கு உள்ளீர்க்கப்பட்ட ஆசிரிய உதவியாளர்களின் எண்ணிக்கை யாது;

(iv) மேற்குறிப்பிடப்பட்ட ஒரு ஆசிரியருக்கு வழங்கப்படும் தற்போதைய மாதாந்த சம்பளம் யாது;

(v) ஆசிரிய உதவியாளர்களின் பதவிப் பெயரை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) ஆசிரிய உதவியாளர்களாக ஆட்சேர்க்கப்பட்ட அனைவரையும், ஆசிரிய சேவையின் ஆட்சேர்ப்பு நடைமுறையின் கீழ் நிரந்தரமாக்கி, குறித்த தரத்திற்கான சம்பள மட்டத்தில் அமர்த்துவதற்கும்;

(ii) ஆசிரிய உதவியாளர்களாக ஆட்சேர்க்கப்பட்ட திகதி முதல் அமுலுக்குவரும் வகையில் இவர்களை சேவையில் நிரந்தரமாக்குவதற்கும்

நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2381/ '12

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை வெளிநாட்டுச் சேவையில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு தரத்தின் அடிப்படையிலும் வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இதுவரை,

(i) இலங்கை வெளிநாட்டுச் சேவையில் ஈடுபட்டிருக்கும் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து சேவைக்குச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கைய யாதென்பயும்;

(ii) இலங்கை வெளிநாட்டுச் சேவைக்குப் புறம்பாக தூதுவர் அலுவலகங்களில் சேவைக்கு ஆட்சேர்க்கப்பட்டுள்ள அரச உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாவையென்பதையும்;

(iii) இலங்கைத் தூதுவர் அலுவலகங்களில் பணிபுரியும் நிரந்தர அரச சேவையைச் சாராத வேறு உத்தியோத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேலே ஆ(ii ) மற்றும் (iii ) இல் வினவப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் பெயர், பதவி மற்றும் ஆட்சேர்க்கப்பட்ட ஆண்டு ஆகியவை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) இலங்கை வெளிநாட்டுச் சேவைக்குப் புறம்பாக தூதுவர் அலுவலக சேவைக்கு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படுகையில் கடைப்பிடிக்கப்படும் நடைமுறை யாது என்பதையும்;

(ஈ) இன்றேல் ஏன்?

2541/ '12

கௌரவ அனுர திசாநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை தொடக்கம் பெலியத்த வரை புகையிரத வீதியை நிர்மாணிப்பதற்கான கருத்திட்டம் ஒன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், அதன் மொத்த தூரம் எவ்வளவென்பதையும்;

(iii) அதன் நிர்மாணப் பணிக்கான கேள்விப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள நிறுவனம் யாதென்பதையும்;

(iv) மேற்படி நிறுவனம் எந்த அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மாத்தறை – பெலியத்த புகையிரத பாதையை நிர்மாணிக்கும் கருத்திட்டத்திற்காக செலவாகும் என எதிர்பார்க்கப்படும் மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்திற்காக கடன் தொகையைப் பெற்றுக்கொள்வதற்கு சீன அரசாங்கத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனின், மேற்படி கடன் தொகைக்கான வட்டி வீதம், கடனை மீள செலுத்த வேண்டிய காலம், தவணைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2626/ '12

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 1990 ஒக்டோபர் 18ஆம் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இல: 44/90 இன் ஏற்பாடுகள் 1996 யூன் 07 ஆம் திகதி தொடக்கம் அமுல்படக்கூடியவாறு மக்கள் வங்கி ஊழியர்களுக்கு ஏற்புடைமையாகின்றது என்பதையும்;

(ii) இலங்கை வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி தனது ஊழியர்களுக்கு இச்சுற்றறிக்கையை ஏற்புடைமையாக்கவில்லை என்பதையும்;

(iii) அரச சேவையின் விசேட தேவைக்காக செயற்படுத்தப்பட்ட 44/90 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை 1996 திசெம்பர் 23ஆம் திகதி இரத்துச் செய்யப்பட்டதென்பதையும்;

(iv) அவ்வாறாயினும், பொது நிருவாக சுற்றறிக்கை இல: 44/90 இன் அடிப்படையில் மக்கள் வங்கி செயற்படுத்திய ஓய்வூதியத் திட்டம் இதுவரை இவ்வங்கியினால் கொண்டு நடாத்தப்பட்டுவருகின்றது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) 44/90 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை இரத்துச் செய்யப்பட்ட திகதி தொடக்கம் செயற்படக் கூடியவாறு 1996 யூன் 7ஆம் திகதிக்கு முன்பிருந்த ஓய்வூதியத் திட்டத்தை மக்கள் வங்கி ஊழியர்களுக்கு மீண்டும் செயற்படுத்துவாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2912/ '12

கௌரவ வசந்த அளுவிகாரே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 1999 ஆம் ஆண்டில் பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களாக ஆட்சேர்க்கப்பட்டவர் களின் எண்ணிக்கை மாகாணங்களுக்கு ஏற்ப வெவ்வேறாக யாது;

(ஆ) (i) மேற்குறிப்பிடப்பட்ட பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்கள் 2000 ஆம் ஆண்டில் முகாமைத்துவ உதவியாளர் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டார்கள் என்பதையும்;

(ii) 2006 ஆம் ஆண்டு இவர்கள் மீண்டும் ஆசிரிய சேவைக்கு உள்வாங்கப்பட்டார்கள் என்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஆசிரியர்களின் சேவைக்காலத்தை, இவர்கள் முகாமைத்துவ உதவியாளர் பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட தினத்திலிருந்து கவனத்தில் கொண்டு, ஆசிரிய சேவையின் தரம் 2-II ற்கு உயர்த்துவதற்கான அங்கீகாரத்தை வழங்குவதற்கான ஒரு சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளதென்பதையும்;

(iv) மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம், பல மாகாணங்களைச் சார்ந்த ஆசிரியர்கள், ஆசிரிய சேவையின் தரம் 2-II ற்கு பதவியுயர்த்தப்பட்டு குறித்த சம்பள மட்டத்தில் அமர்த்தப்பட்டுள்ளனர் என்பதையும்;

(v) மத்திய மாகாணத்தில் குறிப்பிட்ட ஆசிரியர்களுக்கு மேற்படி பதவியுயர்வுகள் கிடைக்கப்பெறவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) ஆ(ii) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆசிரிய சேவைக்கு உள்வாங்கப்பட்ட மத்திய மாகாணத்தின் ஆசிரியர்களையும் தரம் 2-II ற்கு பதவியுயர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல்,ஏன்?

2948/ '12

கௌரவ அ. விநாயகமூர்த்தி,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இற்றைவரை கொழும்பிலுள்ள தேசிய வைத்தியசாலையில் இருதய சத்திர சிகிச்சையை மேற்கொள்வதற்காக காத்திருக்கின்ற நபர்களின் எண்ணிக்கையை அவர் கூறுவாரா?

(ஆ) மேலதிக தீவிர சிகிச்சைப் பிரிவொன்று வழங்கப்படுமாயின் மேற்கூறிய வைத்தியசாலையில் ஒரு நாளில் மேற்கொள்ளப்படும் சத்திரசிகிச்சையின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியுமா என்பதையும் அவர் கூறுவாரா?

(இ) மேற்கூறிய வைத்தியசாலையில் மேலதிக தீவிர சிகிச்சைப் பிரிவொன்றை கொண்டிருப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை அவர் மேற்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2950/' 12

கௌரவ அஜித் குமார,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை சமூர்தி அதிகாரசபையின் சமூர்தி உத்தியோகத்தர் நலனோம்புகை நிதியம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது;

(ii) ஆரம்பத்திலிருந்து இற்றைவரை மேற்படி நிதியத்தில் வரவு வைக்கப்பட்டுள்ள மொத்தப் பணத்தொகை யாது;

(iii) 2012 ஆம் ஆண்டு ஜுன் 30 ஆம் திகதிக்கு, மேற்படி நிதியத்திலிருந்து கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை, இவர்களுக்கு செலுத்தப்பட்டுள்ள மொத்தப் பணத்தொகை மற்றும் நிதியத்தின் மீதி என்பன வெவ்வேறாக யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி நிதியத்தின்,

(i) நிதியை பயன்படுத்தக் கூடிய கருமங்கள்;

(ii) சட்ட நிலைமையை விபரிக்கின்ற சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள்;

(iii) அங்கத்தவர் ஒருவரின் நலனோம்புகை வேண்டுகோளுக்கு ஏற்ப கொடுப்பனவை மேற்கொள்வதற்கு எடுக்கும் காலம்; மற்றும்

(iv) அங்கத்தவர் ஒருவருக்கு உரித்தான கொடுப்பனவை மேற்கொள்கிள்றபோது குறிப்பிட்ட காலத்தை தாண்டுவதாயிருப்பின், அதற்கான காரணம்;

யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) சமூர்தி உத்தியோகத்தர் நலனோம்புகை நிதியத்தைப் பயன்படுத்தி ஏனைய முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்றனவா;

(ii) ஆமெனில், ஆரம்பத்திலிருந்து இன்றுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள முதலீடுகளிலிருந்து ஈட்டப்பட்டுள்ள இலாபம் எவ்வளவு;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட இலாபம் பகிர்ந்தளிக்கப்படும் தரப்பினர்கள் யாவர்;

(iv) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு தரப்பினரிடையிலும் பகிர்ந்தளிக்கப்படும் பணத்தொகை வெவ்வேறாக யாது;

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1894/ '11

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) குருநாகல் மாவட்டத்தின் பன்னல பிரதேச சபையினால் நிர்வகிக்கப்படுகின்ற மாகந்துர நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பசுமை நகரமொன்றையும் பசுமை விளையாட்டுத் தொகுதியொன்றையும் நிர்மாணிக்கின்ற பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் தற்போது இவற்றின் நிர்மாணப் பணிகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இதன் நிர்மாணப் பணிகள் நிறுத்தப்பட்டமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி நிர்மாணப் பணிகளுக்காக நிதி வழங்கிய நிறுவனம் அல்லது நிறுவனங்கள் யாதென்பதையும்;

(iii) இதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) பசுமை நகரத்தினதும் பசுமை விளையாட்டுத் தொகுதியினதும் நிர்மாணப் பணிகள் மீள ஆரம்பிக்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2159/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் கீழ் நிருவகிக்கப்படும் தோட்டங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) இந்த ஒவ்வொரு தோட்டத்திலும் பணிபுரியும் ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இவ்வூழியர்கள் தொடர்பில் மாதமொன்றுக்கு ஊழியர் சேமலாப நிதியத்துக்குச் செலுத்த வேண்டிய பணத்தொகை யாது என்பதையும்;

(ii) இதன் பிரகாரம் இதுவரை ஊழியர் சேமலாப நிதியத்தில் வைப்புச் செய்யப்பட்டுள்ள பணத் தொகை யாது என்பதையும்;

(iii) உரிய முறையில் மேற்படி ஊழியர் சேமலாப நிதியம் வைப்புச் செய்யப்படாவிடின் ஒவ்வொரு தோட்டத்தின் அடிப்படையில் செலுத்த வேண்டியுள்ள நிலுவைப் பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) மொத்த நிலுவைப் பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(v) இந்நிலுவைப் பணத்தொகை எவ்வாறானதொரு நடவடிக்கைக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

(vi) இந் நிலுவைப் பணத்தொகை செலுத்தப்படும் திகதி யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2206/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போதைய அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி அமைச்சுகளுக்கான 2012 ஆம் ஆண்டு மொத்த வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி ஒதுக்கீடுகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதத்தில் யாதென்பதையும்;

(iv) அந்த அமைச்சுகளில் வேலை செய்யும் ஆட்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு என்பதனையும்;

(v) மாதமொன்றுக்கு ஒரு அமைச்சுக்கான மொத்த செலவினம் எவ்வளவு என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) மேலே சொல்லப்பட்ட ஏதேனும் அமைச்சுகளை இல்லாதொழிக்கவோ அல்லது குறைக்கவோ முடியுமா என்பதை அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2326/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006-09-11 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தை வளர்ச்சியடையச் செய்வதாகவும்;

(ii) ஏனைய மருத்துவ பீடங்களின் 2005-2006 மாணவர் குழுக்களுடன் ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட மாணவ மாணவியர்களுக்கும் கட்டுறுபயில்வு நியமனங்கள் வழங்கப்படுமெனவும்;

சனாதிபதி அவர்கள் வாக்குறுதியளித்துள்ளார் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) ஏனைய மருத்துவ பீடங்களில் காணப்படும் வசதிகள் ரஜரட்ட மருத்துவப் பீடத்திலும் போதியளவு தாபிக்கப்பட்டுள்ளதா;

(ii) பேராசிரியர் சிகிச்சைப் பயிற்சிகளுக்குத் தேவையான கட்டிடம் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் தற்போது ரஜரட்ட மருத்துவ பீடத்தில் தாபிக்கப்பட்டுள்ளதா;

(iii) 2011 மே மாதத்தில் பேராசிரியர் சிகிச்சை பயிற்சிக்காக அனுப்ப வேண்டியிருந்த மாணவர்களின் எண்ணிக்கை யாது;

(iv) தற்போது இவர்கள் மேற்படி பயிற்சியை ஆரம்பித்துள்ளார்களா;

(v) இல்லையெனில், இதற்கு மாணவர்களை அனுப்புவதற்கு எவ்வளவு காலம் எடுக்கும்

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2542/ '12

கௌரவ அநுர திசாநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி முதல் மாத்தறை வரை திருத்தியமைக்கப்பட்டு வருகின்ற புகையிரத வீதியின் நீளம் எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி புகையிரத வீதியை திருத்தியமைப்பதற்கான கருத்திட்டம் கையளிக்கப்பட்டுள்ள நிறுவனம் எந்த அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்தின் இணக்கப்பாட்டிற்கு அமைய அகற்றப்பட்ட பழைய புகையிரத தண்டவாளங்களின் உரிமை யாருக்கு கிடைக்க வேண்டும் என்பதையும்;

(ii) அகற்றப்பட்ட தண்டவாளங்கள் விற்பனை செய்யப்பட்டனவா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி தண்டவாளங்களை கொள்வனவு செய்தவர்கள் யாவர் என்பதையும்;

(iv) தண்டவாளங்கள் விற்பனை செய்யப்பட்ட விலை மற்றும் விற்பனையின் மூலம் கிடைத்த மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2012 நவம்பர் 16, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1895/ '11

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தின் குளியாப்பிட்டிய கல்வி வலயத்திற்குரியதாயிருந்த யாய காமினீ கனிஷ்ட வித்தியாலயம் மூடப்பட்டு பல வருடங்கள் ஆகின்றனவென்பதையும்;

(ii) இந்த வித்தியாலயத்திற்குச் சொந்தமாகவிருந்த சில கட்டிடங்கள் தற்போது அழிவுற்று வருகின்றனவென்பதையும்;

(iii) இந்த வித்தியாலயத்திற்குச் சொந்தமாக சுமார் ஏழு ஏக்கர் நிலப்பரப்பு உள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) யாய காமினீ கனிஷ்ட வித்தியாலயத்திற்குச் சொந்தமாகவுள்ள கட்டிடங்கள் மற்றும் நிலப்பரப்பு என்பவற்றை அழிவுற இடமளிப்பது பெரும் தவறாகும் என்பதையும்;

(ii) மேற்படி வித்தியாலயத்திற்குச் சொந்தமான வளங்களைப் பயன்படுத்தி கைத்தொழிற்சாலையொன்றை ஆரம்பித்து பிரதேசவாழ் மக்களின் தொழில் பிரச்சினைக்கு தீர்வு வழங்க முடியுமென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) ஆமெனில், மேற்படி பாடசாலையின் வளங்களை மேலே முன்மொழியப்பட்டவாறு பயன்படுத்துவதற்கு திட்டமிடுவாரா என்பதையும்;

(ii) இன்றேல், பயனுள்ள வேறு நடவடிக்கைக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த நடவடிக்கை யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1986/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) தற்போது அரசாங்கத்திற்குச் சொந்தமாகவுள்ள தனியார் கம்பனிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இக்கம்பனிகளின் பெயர்களும் அவை உரியதாயுள்ள அமைச்சுக்களும் தனித்தனியாக யாவையென்பதையும்;

(iii) ஒவ்வொரு கம்பனியினதும் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் பெயர்களும் முகவரிகளும் யாவையென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு கம்பனியிலும் இலங்கை அரசாங்கத்திற்குச் சொந்தமாக வுள்ள பங்குகளின் சதவீதம் மற்றும் தனியார் துறையினால் முதலீடு செய்யப்பட்டுள்ள பங்குகளின் சதவீதம் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(v) தனியார் முதலீட்டாளர்களின் பெயர்களும் முகவரிகளும் ஒவ்வொரு கம்பனி வாரியாக யாவையென்பதையும்;

(vi) மேற்படி ஒவ்வொரு கம்பனியும் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் பெற்றுள்ள தேறிய இலாபம் அல்லது நட்டம் தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2207/ ’11

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துடன் தொடர்புள்ள வகையில் கடந்த 5 ஆண்டுகளுக்கும்,

(i) பயன்படுத்தப்பட்ட மொத்த மூலதனம் மற்றும் ஒதுக்குகள் யாவையென்பதையும்;

(ii) மொத்த பணியாட்டொகுதியினரின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்;

(iv) ஒரு பணியாளருக்கான இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதனையும்;

(v) தீர்வைகளாக அல்லது அறவீடுகளாக அரசாங்கத்திற்கு செலுத்திய தொகை எவ்வளவு என்பதையும்

அவர் வருடாந்த அடிப்படையில் கூறுவாரா?

(ஆ) அரச நிறுவனங்களிடமிருந்து ரூபவாஹினி கூட்டுத்தாபனத்த்றற்கு கடந்த 2 வருடங்களாக செலுத்தப்பட வேண்டிய பணத்தொகையை அந் நிறுவனங்களின் பெயர்களுடனும் பணப்பெறுமதியுடனும் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2327/ ’12

கௌரவ சஜித் பிரேமதாச,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரையான காலத்தில் ரூபா. 900/- மற்றும் ரூபா. 1500/- என்றவாறு நிவாரண உதவிகளை பெற்ற சமுர்த்தி பயனாளிகளிலிடமிருந்து சமுர்த்தி வங்கிகள் ஊடாக வருடாந்தம் அறவிடப்பட்ட கட்டாய சேமிப்புத் தொகை;

(ii) கட்டாய சேமிப்பு அறவிடப்பட்ட மேற்படி சமுர்த்தி பயனாளிகளில் தற்போது சமுர்த்தி கொடுப்பனவு இரத்துச் செய்யப்பட்டுள்ள எண்ணிக்கை;

(iii) இவ்வாறு சமுர்த்தி இரத்தாக்கப்பட்ட சமுர்த்தி பயனாளிகளில் தற்போது கட்டாய சேமிப்பை மீளப்பெற்றுக்கொண்டவர்களின் எண்ணிக்கை;

(iv) இவ்வாறு செலுத்தப்பட்ட மொத்தப் பணத் தொகை;

(v) தற்போது சமுர்த்தி இழக்கச் செய்யப்பட்ட சமுர்த்தி பயனாளிகளில் கட்டாய சேமிப்பு மீளச் செலுத்தப்பட வேண்டியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை;

மாவட்ட மட்டத்தில் தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து விலகிய சமுர்த்தி பயனாளிகளின் கட்டாய சேமிப்பை மீளச் செலுத்தி முடிப்பதற்கு எடுக்கும் காலம் எவ்வளவென்பதையும்;

(ii) தற்சமயம் மரணமடைந்துள்ள சமுர்த்தி பயனாளிகளின் கட்டாய சேமிப்பை செலுத்துவதில் பின்பற்றப்படும் நடைமுறை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2543/ '12

கௌரவ அநுர திசாநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஓட்டத்தில் விடப்படுகின்ற புகையிரதங்களுடன் புகையிரத பெட்டிகளை இணைத்துக் கொண்டு செல்வதற்கு தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அந்நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டதன் அடிப்படை யாது என்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்திற்கும் இணைத்துக் கொண்டு செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள புகையிரத பெட்டிகளின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தனியார் நிறுவனங்களுக்கு உரித்தான புகையிரத பெட்டியொன்றில் கொழும்பிலிருந்து கண்டி வரை பயணிப்பதற்காக அறவிடப்படுகின்ற கட்டணம் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் அமைய தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) அறவிடப்படுகின்ற மேற்படி பணத் தொகையில் புகையிரத திணைக்களத்திற்கு கிடைக்கின்ற பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) தனியார் நிறுவனங்களினால் இணைத்து ஓட்டத்தில் விடப்படுகின்ற புகையிரத பெட்டிகள் மேற்படி நிறுவனங்களினாலேயே இறக்குமதி செய்யப்பட்டவையா என்பதையும்;

(iv) இன்றேல், அவற்றின் முன்னைய உரிமை புகையிரத திணைக்களத்துக்கு சொந்தமானதாக இருந்தா என்பதையும்;

(v) ஆமெனில், தனியார் நிறுவனங்களுக்கு அப்பெட்டிகளை ஒப்படைத்தலானது கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டதன் பின்னர் மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(vi) ஆமெனில், அப்பெட்டிகள் வழங்கப்பட்ட விலைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2696/ '12

கௌரவ அஜித் பி. பெரேரா,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2003ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை வாத்துவ தல்பிடிய கரைவலைத் துறைமுகத்தில் பழுதடைந்த தெப்பமொன்று நிறுத்திவைக்கப் பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி தெப்பத்தின் காரணமாக தல்பிடிய கரைவலைத் துறைமுக மீன்பிடி நடவடிக்கைகளுக்கு இடையூறுகள் ஏற்படுகின்றதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி தெப்பத்தின் உரிமையாளர் யார் என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) மேற்படி தெப்பத்தை தல்பிடிய கரைவலைத் துறைமுகத்திலிருந்து அப்புறப்படுத்தி அத்துறைமுகத்தின் மீன்பிடி நடவடிக்கைகளைச் சீராகக் கொண்டுவருவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2949/ '12

கௌரவ அ. விநாயகமூர்த்தி,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடமாகாணத்தில் வைத்தியசாலைகளில் மனநலம் பாதிக்கப்பட்டமையால் சிகிச்சை பெறும் நபர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) சொல்லப்பட்ட மனநலம் பாதிக்கப்பட்டோரை வலது குறைந்தோராக கருத முடியுமா என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்கூறப்பட்ட மனநலம் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கு ஏதாவது நிகழ்ச்சித் திட்டம் வடமாகாணத்தில் உள்ளதா என்பதனை அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2951/ '12

கௌரவ அஜித் குமார,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சமுர்த்தி சமூக பாதுகாப்பு நிதியம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) ஆரம்பிக்கப்பட்ட திகதி தொடக்கம் இற்றைவரை மேற்படி நிதியத்தின் அங்கத்தவர் எண்ணிக்கை, அதற்குக் கிடைத்த பணத்தொகை, சமுர்த்தி நிவாரண உதவிகள் வழங்கப்பட்ட காலாண்டுகளின் அடிப்படையில் தனித்தனியே யாதென்பதையும்;

(iii) 2012 ஜுன் 30ஆம் திகதியில் மேற்படி நிதியத்தின் மீதி எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி நிதியத்தின்,

(i) நிதியை பயன்படுத்தக்கூடிய கருமங்கள் யாவை என்பதையும்;

(ii) ஆரம்பத்திலிருந்து இற்றை வரை நிதி பயன்படுத்தப்பட்டுள்ள கருமங்கள் யாவை என்பதையும்;

(iii) சட்ட நிலைமையை விபரிக்கின்ற சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் யாவை என்பதையும்

(iv) அங்கத்தவர் ஒருவரின் சமூகப் பாதுகாப்பு உரித்துடைமை தொடர்பிலான கோரிக்கைக்கு ஏற்ப கொடுப்பனவை செலுத்துவதற்கு எவ்வளவு காலம் செல்லும் என்பதையும்;

(v) அங்கத்தவர் ஒருவருக்கு உரித்துடைய கொடுப்பனவை செலுத்தும் போது குறிப்பிட்ட காலத்தைத் தாண்டுவதாயிருப்பின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) சமுர்த்தி சமூகப் பாதுகாப்பு நிதியத்தைப் பயன்படுத்தி வேறு முதலீடுகள் செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், ஆரம்பம் தொடக்கம் இற்றை வரை மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளிலிருந்து ஈட்டப்பட்டுள்ள இலாபம் எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி இலாபம் பகிர்ந்தளிக்கப்படும் தரப்பினர்கள் யாவர் என்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு தரப்பினருக்கும் பகிர்ந்தளிக்கப்படும் பணத் தொகை தனித்தனியே எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2993/ '12

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலிஸ் திணைக்களத்திற்குத் தேவையான கான்ஸ்டபிள் சாரதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி எண்ணிக்கையில் தற்போது கடமையாற்றும் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) பொலிஸ் திணைக்களத்தில் நிலவும் பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதி வெற்றிடங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதி வெற்றிடங்கள் காணப்படுவதால் பொலிஸ் நிலையங்களில் பெருமளவிலான பிரச்சினைகள் தோன்றியிருப்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) தற்போது மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதிகளை சேர்த்துக்கொள்வதற்கான வயதெல்லை யாதென்பதையும்;

(iv) மேற்படி ஆர்சேர்ப்பிற்குரிய ஆகக்குறைந்த தகைமை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) பொலிஸ் திணைக்களத்தில் கான்ஸ்டபிள் சாரதி வெற்றிடங்களுக்கு மேலதிகமாக வேறு பதவிகளில் வெற்றிடங்கள் நிலவுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வெற்றிடங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு வெற்றிடத்தினதும் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1897/ '11

கௌரவ புத்திக பதிரண,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி மாவட்டத்தின் நாகொட பிரதேச செயலக ஆளுகைப் பிரதேசத்தில் உடவெலிபிட்டிதலாவ சந்தி தொடக்கம் ஹொரன்கல்ல வரையிலான வீதியில் இடப்பட்ட கொன்கிறீட் தற்போது உடைந்து வீதியில் குழிகள் ஏற்பட்டுள்ளன என்பதையும்;

(ii) இந்த வீதியில் கொன்கிறீட் இடப்படுதல் உரிய தரத்தில் மேற்கொள்ளப் படவில்லையென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) கொன்கிறீட் இடப்பட்ட மேற்படி வீதியின் நீளம் மற்றும் அகலம் எவ்வளவென்பதையும்;

(ii) கொன்கிறீட் இடுவதற்காக செலவிடப்பட்ட மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) இதற்காக நிதி வழங்கிய நிறுவனம் அல்லது நிறுவனங்களின் பெயர்கள் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி வீதியில் கொன்கிறீட் இடுவதை மேற்கொண்ட ஒப்பந்தகாரரின் பெயர் யாதென்பதையும்;

(ii) ஒப்பந்தகாரருக்கு பணம் செலுத்துவதற்கு முன்னர் தொழில்நுட்ப அலுவலரின் அறிக்கை பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி வீதியில் கொன்கிறீட் இடப்பட்டமை தொடர்பாக முறைசார்ந்ததொரு விசாரணை நடத்தப்படுமா என்பதையும்;

(iv) ஒப்பந்தகாரரின் மூலமாக அல்லது வேறு ஏற்பாட்டின் மூலமாக மேற்படி வீதியை மீண்டும் மறுசீரமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(v) ஆமெனில் இதற்காக எடுக்கப்படும் காலம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2160/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வனசீவராசிகள் பாதுகப்புத் திணைக்களத்தில் பணிபுரியும் விலங்கு வைத்தியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவர்கள் பணிபுரியும் இடங்கள் யாவை என்பதையும்;

(iii) இவர்களில் வன வலயங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள விலங்கு வைத்தியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வசதிகள் யாவையென்பதையும்;

(v) வன சீவராசிகள் வலயங்களில் பற்றாக்குறையாக அல்லது மிகையாக உள்ள விலங்கு வைத்தியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vi) விலங்கு வைத்தியர்களுக்கான வெற்றிடங்கள் இருப்பின் இவ்வெற்றிடங்கள் நிரப்பப்படும் திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2208/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அபிவிருத்தி லொத்தர் சபை தொடர்பில் கடந்த ஐந்து ஆண்டுகளில்,

(i) பயன்படுத்தப்பட்ட மொத்த மூலதனம் மற்றும் ஒதுக்குகள் என்பன யாவையென்பதையும்;

(ii) இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்;

(iii) மொத்த பணியாட்டொகுதியினர் எண்ணிக்கை, ஒரு பணியாளருக்கான செலவு அல்லது இலாபம் போன்றன யாதென்பதையும்;

(iv) கழிப்பனவுகள் அல்லது அரசாங்கத்திற்கு செலுத்திய அறவீடுகள் யாதென்பதையும்

வருடாந்த அடிப்படையில் கூறுவாரா?

(ஆ) (i) அபிவிருத்தி லொத்தர் சபையின் ஏதாவது பணம் கடந்த 5 ஆண்டு காலங்களில் பதிவழிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், பதிவழிக்கப்பட்ட தொகை யாதென்பதையும்;

(iii) என்ன காரணத்திற்காக அவ்வாறு செய்யப்பட்டது என்பதனையும்;

(iv) அவ்வாறு எப்போது நடைபெற்றது என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) அபிவிருத்தி லொத்தர் சபை, கடந்த 5 ஆண்டு காலப்பகுதியிலே அது பணம் பயன்படுத்திய விதத்தை விட சிறந்த முறையில் வினைத்திறனாக பயன்படுத்தியிருக்க முடியுமா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அது எவ்வாறு செய்யப்படுகின்றது என்பதையும்;

(iii) இன்றேல், ஏன் அவ்வாறு செய்யப்படவில்லை என்பதையும்

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2328/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் சமமான கடமையில் ஈடுபடும் பொலிஸ் பாதுகாப்பு உதவியாளர்கள், இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் இணைக்கப்பட்டு சேவையில் நிரந்தரமாக்கப்பட்டு ஓய்வூதிய சம்பள முறைக்கு பங்களிப்புச் செய்யப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) பொலிஸ் பாதுகாப்பு உதவியாளர்களின் சேவை நிரந்தரமாக்கலானது பொலிஸ் திணைக்களத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறையின் கீழ் இடம்பெற்றதா என்பதையும்;

(ii) இவர்களுக்கு பொருத்தமான சீருடையையும் கடமையில் ஈடுபடும் போது தகவல் குறிப்பு புத்தகத்தில் கடமைக்கு சமுகமளிப்பதை பதிவதற்கான அனுமதியையும் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு உரித்தான சம்பள உயர்வு, வலய கொடுப்பனவு, பிரயாணச் செலவு, கஷ்டப் பிரதேச கொடுப்பனவு, இதர கொடுப்பனவுகள் என்பன சேவை நிரந்தரமாக்கப்பட்ட திகதி தொடக்கம் பொலிஸ் பாதுகாப்பு உதவியாளர்களுக்கும் செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இவ்வாறு செலுத்தப்படாவிடின் மேற்படி சலுகைகளை இவர்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2545/ '12

கௌரவ அநுர திசாநாயக்க,— தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தெற்கு கடுகதி நெடுஞ்சாலையில் காலியிருந்து கொழும்பு வரையான பகுதியில் பயணிகளை ஏற்றிச் செல்வதற்காக உரிமப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள தனியார் பேருந்து வண்டிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி உரிமப்பத்திரங்கள் எந்த அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன என்பதையும்;

(iii) உரிமப்பத்திரமொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக வருடாந்தம் செலுத்த வேண்டிய பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி பேருந்து வண்டிகளின் ஓட்டத்திற்காக தயாரிக்கப்பட்டுள்ள ஓட்ட நேர அட்டவணை யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2953/ '12

கௌரவ அஜித் பி. பெரேரா,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'மெனிங் டவுன்' வீடமைப்புத் திட்டத்தில் சில குடியிருப்பாளர்கள் பதிவு செய்யப்பட்ட கூட்டாட்சி வரைபடத்திற்கு முரணாக அத்துமீறிய நிர்மாணிப்புக்களை மேற்கொண்டுள்ளனரென்பதையும்;

(ii) மேற்படி வீடமைப்புத் திட்டத்தின் முகாமைத்துவப் பிரிவு மேற்படி அத்துமீறிய நிர்மாணிப்புகளை அறிவிப்பதிலிருந்தும் அல்லது அப்புறப்படுத்துவதிலிருந்தும் திட்டமிட்டு தவிர்ந்து நடக்கின்றதென்பதையும்;

(iii) கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை தமது அதிகாரத்திற்கு ஏற்ப அத்துமீறிய நிர்மாணிப்புகளை அப்புறப்படுத்துவதற்காக விசாரணைகளை மேற்கொள்வதில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) 'மெனிங் டவுன்' வீடமைப்புத் திட்டத்தில் தற்போது காணப்படும் அத்துமீறிய நிர்மாணிப்புகளை உடனடியாக நீக்குமாறு கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபைக்கு ஆலோசனை வழங்குவதற்கும்;

(ii) மேற்படி அதிகாரசபையின் அன்றாட பரிசோதனையின் மூலம் மேற்படி கட்டிடத்தொகுதியின் கூட்டாட்சி ஆதனங்கள், பொது உபகரணங்கள், பொதுச் சொத்துக்களின் பராமரிப்பை சீராக பேணுவதை உறுதி செய்வதற்குத் தேவையான கட்டளைகளைப் பிறப்பிப்பதற்கும்;

(iii) இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இயைபானதாகவும் உட்பட்டதாகவும் செயற்பட வேண்டுமென அனைத்து முகாமைத்துவ பிரிவுகளுக்கும் பொது அறிவுரைகளை வெளியிடுவதற்கும்

நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

## (2012 நவம்பர் 16, வெள்ளிக்கிழமை)

1631/ '11

கௌரவ ராஜீவ விஜேசிங்க,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (6)

(அ) (i) குடும்ப வன்முறை தடுப்புச் சட்டத்தின் கீழ், விண்ணப்பமொன்று விடுக்கப்பட்டதன்பேரில் அவ்விண்ணப்பத்தின் மீது விசாரணை முடிவடையும் வரையில் நீதிமன்றம் இடைக்கால பாதுகாப்பு உத்தரவு ஒன்றை பிறப்பிக்கவேண்டும் என்பதையும்;

(ii) அத்தகைய விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டு 14 நாட்களுக்குள் அவ் விண்ணப்பம் மீது விசாரணை மேற்கொள்வதற்கான ஓர் உத்தரவை நீதிமன்றம் வழங்க வேண்டும் என்பதையும்;

(iii) ஓர் இடைக்கால பாதுகாப்பு உத்தரவு 12 மாதங்களுக்கு மேற்படாத காலத்திற்கு அமுலில் இருக்க வேண்டுமென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) விசாரணை மேற்கொள்ளப்படாத மற்றும் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குப் பின்னர் விசாரணை மேற்கொள்ளப்பட்ட வழக்குகளையும்;

(ii) சட்டத்தைப் பிரயோகிக்கத் தவறிய நீதிவான்களை வழிநடத்துவதற்கு மேற்கொள்ளப்படும் பரிகார நடவடிக்கையையும், தாமத்தால் பாதிக்கப் பட்டோருக்கான நட்டஈட்டையும்;

(iii) இடைக்கால உத்தரவொன்றிக்கான இறுதிக் திகதியொன்று காணப்படாத பட்சத்தில் இடைக்கால உத்தரவு சாரா கட்டளையொன்றிக்கு இறுதித் திகதி யொன்று பெற்றுக்கொள்வதன் காரணங்களையும்;

(iv) மேற்படி முரண்பாட்டை சீர்செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2461/ '12

கௌரவ மொஹமட் அஸ்லம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அட்டாளைச்சேனை 14, கொமன் வீதி, 4/5 ஆம் இலக்க இடத்தில் வசிக்கின்ற திரு எம்.ஏ. அபாஜுல்பான், இலங்கை ஆசிரியர் கல்விச் சேவையின் III ஆம் வகுப்புக்கு ஆட்சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சைக்கு 2006.06.01 ஆம் திகதி தோற்றியுள்ளார் என்பதையும்;

(ii) சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ள போதிலும் மேற்படி பதவிக்கு நியமிப்பதற்கு பகிரங்க சேவைகள் ஆணைக்குழு இதுவரை அவரின் பெயரை சிபார்சு செய்யவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி விடயம் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள (HRC/2775/09) ஆம் சிபார்சை அமுல்படுத்தி (17/2005 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைய) இவருக்கு உரித்தாக வேண்டிய பதவி உயர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான கல்வி அமைச்சின் சிபார்சை, பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2864/ '12

கௌரவ எம். ரீ. ஹசன் அலி,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாநகர சபையின் ஓய்வுபெற்ற உதவி காய்ச்சியொட்டுநர் திரு. ஏ.எச்.எம். மஹ்ரூப்பின் முறைப்பாட்டுக்கு ஏற்புடையதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கொழும்பு மாநகர சபைக்கு செய்துள்ள விதப்புரை நடைமுறைப்படுத்தப்படுவதன் முன்னேற்றம் தொடர்பாக, உள்ளூராட்சி ஆணையாளர் (மே.மா) LGD/09/01/10ஆம் இலக்க, 2012.02.29ஆம் திகதிய கடிதத்தின் மூலம் நகர ஆணையாளரிடம் வினவியுள்ளார் என்பதையும்;

(ii) 2012.05.14 மற்றும் 2012.05.31ஆம் திகதிய கடிதங்களின் மூலம் தொடர்ந்தும் அது தொடர்பில் நினைவூட்டப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) 17/2005ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு முரணாகச் செயலாற்றுகின்ற கொழும்பு மாநகர சபையின் உத்தியோகத்தர்கள் மேற்படி அ(i) இல் குறித்துரைக்கப்பட்டுள்ள விதப்புரையை நடைமுறைப்படுத்த இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) திரு. மஹ்ரூப்பிற்கு விதந்துரைக்கப்பட்ட நிவாரணங்கள் வழங்கப்படுவதை தாமதப்படுத்திய உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1632/ '11

கௌரவ ராஜீவ விஜேசிங்க,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (6)

(அ) (i) 1841 ஆம் ஆண்டின் அலைந்து திரிவோர் கட்டளைச்சட்டத்தின் கீழ் 2001 ஆம் வருடம் முதல் இற்றை வரை கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களது எண்ணிக்கையை வருடாந்த அடிப்படையில் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(ii) அவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்களுள் இன்றும் சிறையில் அல்லது வேறு இடங்களில் தடுத்து வைக்கப்பட்டவர்களது எண்ணிக்கை என்னவென்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) அலைந்து திரிவோர் கட்டளைச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'திருத்த முடியாத போக்கிரி' (Incorrigible rogues) என்பதன் அர்த்தம் என்னவென்பதையும்;

(ii) அச்சொல் எந்நோக்கத்தின் அடிப்படையில் பிரயோகிக்கப்பட்டது என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) அலைந்து திரிவோர் கட்டளைச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள், அது அவ்வாறு பிரயோகிக்கப்பட வேண்டும் போன்றன தொடர்பாக 2004 ஆம் ஆண்டு மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் விதப்புரைகள் மேற்கொள்ளப்பட்டன என்பதை அவர் அறிவாரா?

(ஈ) (i) மேற்குறிப்பிடப்பட்ட விதப்புரைகளை துரிதமாக நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்,

(ii) அவ்வாறு இல்லையெனில், அக்கட்டளைச்சட்டத்தின் கீழான நடைமுறைகள் சீர்செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்துகொள்வதற்கு மேற்கொள்ளப்படவுள்ள ஏனைய நடைமுறைகள் என்னவென்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

2462/ '12

கௌரவ மொஹமட் அஸ்லம்,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அக்குரணை, தொடம்கொல்லை, 233/1 ஆம் இலக்க முகவரியில் வசிக்கின்ற, திரு. குருகொட முஹந்திரம்லாகெதர நூர் முஹம்மத் செய்யத் முஹம்மத், நுவரெலியா மாநகர சபைக்கு உரித்தான "கார்கில்ஸ் திடல்" வர்த்தக கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள ஒரு கடை அறையை குத்தகைக்கு பெற்றுக் கொள்வதற்காக 1993.01.04 ஆம் திகதி ரூபா ஒரு இலட்சம் பணத் தொகையையும், 2002.09.25 ஆம் திகதி ரூபா தொண்ணூராயிரம் பணத் தொகையையும் வைப்புச் செய்துள்ள போதிலும் இதுவரை அவருக்கு கடை அறை வழங்கப்படவில்லை என்பதையும்;

(ii) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணைகளுக்கு அமைய திரு. செய்யத் முஹம்மதுக்கு, மேற்படி கடை அறை உரித்தாக வேண்டுமென வழங்கப்பட்டுள்ள சிபார்சை (HRC/K/429/06/11) குறித்த உள்ளூராட்சி மன்றம் அமுல்படுத்தத் தவறியுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி சிபார்சை அமுல்படுத்தத் தவறியுள்ளதுடன், 17/2005 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையை மீறிவருகின்ற நுவரெலியா மாநகர சபையின் பொறுப்புக்கூற வேண்டியர்களுக்கு எதிராக பக்கச்சார்பற்றதொரு விசாரணையை நடாத்துவதற்கும், திரு. செய்யத் முஹம்மதுக்கு நியாயத்தை நிறைவேற்றுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2865/ '12

கௌரவ எம். ரீ. ஹசன் அலி,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹொரொவ்பத்தனை பொலிஸ் நிலையத்தில் சேவையாற்றிக்கொண்டிருந்த திரு ஏ.என்.எம் தாஹிர் (25878) சுகயீனம் காரணமாக, பொலிஸ்மா அதிபரின் 190 /2009 ஆம் இலக்க, 2009/12/30 ஆம் திகதிய சுற்றறிக்கைக்கமைய 2009.06.06 ஆம் திகதியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளாரென்பதையும்;

(ii) 2006.02.24 ஆம் திகதியிலிருந்து பொலிஸ் நிரந்தர சேவைக்கு நியமிக்கப்பட்ட இவருடைய சேவையை உள்ளீர்ப்பதற்கான விதப்புரை Staff/DIG/IG/ Out/259/11 மற்றும் 2011.10.04 ஆம் திகதிய கடிதம் மூலம் பாதுகாப்பு அமைச்சுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) திரு. தாஹிரை பொலிஸ் நிரந்தர சேவைக்கு உள்ளீர்த்து ஓய்வூதிய கொடுப்பனவையும் ஏற்புடைய சம்பளத்தையும் துரிதமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2866/ '12

கௌரவ எம். ரீ. ஹசன் அலி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருணாகல் மாவட்டத்தின் கஹட்டகஹமட, சியம்பலாகஸ்கொட்டுவவில் வசிக்கும் திருமதி எஸ்.எச்.எம். பாத்திமா கிரி/தலுபொத்தகம கனிஷ்ட வித்தியாலயத்தில் 2002.02.01ஆம் திகதியிலிருந்து தொண்டர் ஆசிரியையாக சேவையாற்றுகின்றார் என்பதையும்;

(ii) அதன் பிரகாரம் ஆசிரிய உதவியாளர் நியமனத்தைப் பெறுவதற்கு உரித்துடைய திருமதி பாத்திமா வடமேல் மாகாண முதலமைச்சரும் கல்வியமைச்சருமானவரின் செயலாளரினால் வ/முஅசெ/ஆ13/3/4 ஆம் இலக்க, 2009.8.17 ஆம் திகதிய கடிதம் மூலம் மேற்படி நியமனக் கடிதங்களை வழங்குவதற்கு தொடர்பு இலக்கம் 11 இன் கீழ் அழைக்கப்பட்ட போதிலும் இதுவரை மேற்படி ஆசிரிய உதவியாளர் நியமனம் வழங்கப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) 2009 ஆகஸ்ட் மாதத்திலிருந்து அமுலுக்கு வரும் வகையில் திருமதி பாத்திமாவுக்கு உரித்துடைய ஆசிரிய உதவியாளர் நியமனத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2867/ '12

கௌரவ எம். ரீ. ஹசன் அலி,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன மதஅலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1996.09.27 ஆம் திகதி அல்லது அண்மித்த ஒரு திகதியில் அம்பாறை மாவட்டத்தின் பாண்டிருப்பு பொலிஸ் பாதுகாப்புச் சாவடியில் கடமையில் ஈடுபட்டிருக்கையில், பயங்கரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டு சுட்டுக் கொலை செய்யப்பட்ட, கல்முனை பொலிசுக்கு இணைக்கப்பட்டிருந்த ஊர்காவற் படை வீரரான, திரு. அப்துல் ரமீசு (9913) சார்பில் நட்டஈட்டுத் தொகை மற்றும் ஓய்வூதியம் இதுவரை வழங்கப்படவில்லையென்பதையும்;

(ii) இது தொடர்பில் கல்முனை பொலிஸாரின் ஓ.டபிள்யு/3037/11 ஆம் இலக்க 2011.04.22 ஆம் திகதிய கடிதம் மற்றும், அம்பாறை பொலிஸ் அத்தியட்சகரின் எஸ்.ஏ.2/எச்.ஜீ/10/2011ஆம் இலக்க 2011.04.20 ஆம் திகதிய கடிதத்தின் மூலம், இங்கினியாகலை சிவில் பாதுகாப்பு அலுவலகத்துக்கு அறிவித்துள்ளபோதிலும், இது வரை எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) கொலை செய்யப்பட்ட திருமணமாகாதவரான திரு. அப்துல் ரமீஸின் வயோதிப பெற்றோரான எம்.ஏ. அப்துல் அஸீஸ் மற்றும் யூ.எல். ஆசியா உம்மா ஆகியோருக்கு, குறித்த நட்டஈட்டுத் தொகையினையும், ஓய்வூதியத்தையும் தாமதமின்றி வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2012 நவர்பர் 17, சனிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1898/ '11

கௌரவ புத்திக பதிரண,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கடவான குளக்கட்டு புலிப் பயங்கரவாதிகளால் தகர்க்கப்பட்டு சுமார் இருபத்தாறு வருடங்கள் கடந்திருந்த போதிலும் இன்றுவரை இது திருத்தப்படாமையால் விவசாயிகளுக்கு பயிர்ச்செய்கையை ஆரம்பிக்க முடியாதுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த வாவியை மறுசீரமைப்பதில் உள்ள தடைகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி பிரச்சினைகளைத் தீர்த்து துரிதமாக வாவியை திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) இதற்காக தற்போது நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன் ?

2180/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி,திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(இ) (i) 2010 / 2011 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் முன்மொழியப்பட்டசிறிய மற்றும் நடுத்தர அளவிலான உள்நாட்டு தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் கருத்திட்டத்துக்காக உலக வங்கியிலிருந்து பணம் கிடைத்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அப்பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி பணம் கிடைத்தது கடன் தொகையாகவா அல்லது உதவித் தொகையாகவா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் உள்நாட்டு தொழில்முயற்சியாளர்களுக்கு கடன் வழங்கும் போது,

(i) அறவிடப்பட்ட வட்டி;

(ii) வழங்கப்பட்ட ஆகக்கூடிய கடன் தொகையின் பெறுமதி;

(iii) ஈடுபட்ட நிறுவனங்கள்;

(iv) நன்மையைப் பெற்ற மாவட்டங்கள், நபர்கள் மற்றும் நிறுவனங்கள்;

(v) ஏற்புடையதாகக் கொள்ளப்பட்ட கருத்திட்டங்கள்;

(vi) நன்மைபெற்ற விவசாய உற்பத்தி கருத்திட்டங்களின் எண்ணிக்கை;

(vii) கடன் தொகையை செலுத்தி முடிக்க வேண்டியதாக விதிக்கப்பட்டுள்ள வருடங்களின் எண்ணிக்கை;

(viii) கடனை மீளச் செலுத்துவதற்காக வழங்கப்பட்டுள்ள சலுகைக் காலம்

யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2209/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தேசிய சேமிப்பு வங்கி தொடர்பாக கடந்த 5 வருடங்களில்,

(i) பயன்படுத்தப்பட்ட மொத்த மூலதனம் மற்றும் ஒதுக்குகள் என்பன யாவையென்பதையும்;

(ii) உரிமை முதல் மீதான வருவாய் மற்றும் சொத்துக்கள் மீதான வருவாய் என்பன தனித்தனியாக எவ்வளவு என்பதனையும்;

(iii) மொத்த பணியாட்டொகுதியினரின் எண்ணிக்கை மற்றும் ஒரு பணியாளருக்கான செலவினம் போன்றன எவ்வளவு என்பதையும்;

(iv) ஒரு தனியார் துறை வங்கி நிறுவனத்துடன், பணியாளருக்கான கிரயத்தின் ஒப்பீட்டையும்;

(v) இன்றுள்ளவாறு மீள ஏற்படாத செலவினம் யாதென்பதையும்;

(vi) அரசாங்கத்திற்கு அறவீடுகளாகவோ தீர்வைகளாகவோ செலுத்தப்பட்ட தொகை எவ்வளவு என்தையும்;

(vii) இலாபம் அல்லது நட்டம் யாதென்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2329/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ரிதீமாலியத்த பிரதேச செயலாளர் பிரிவுக்கு உரித்தான இக்கிரியகொட கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள வேகந்தவாவி, சத்தாதிஸ்ஸ மன்னர் காலத்திலிருந்து இதுவரை காலம் தோரபலா ஓயாவினால் போசிக்கப்பட்டு வந்தது என்பதையும்;

(ii) 50 அடிகள் உயரமானதும், 1கி.மீ. நீளமானதுமான வாவி அணைக்கட்டையும் 500 ஏக்கர் பரப்பையும் கொண்டுள்ள மேற்படி வாவிக்குள் அத்துமீறிய வகையில் 25 ஏக்கர் வயல்வெளியை போசிப்பதற்கு இடமளித்துள்ளமையால் சுமார் 800 விவசாயக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வாவிக்குள் உள்ள அத்துமீறிய பயிர்ச்செய்கைகளை அகற்றி வேகந்த வாவியை மறுசீரமைக்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி மறுசீரமைப்புப் பணிகளை நிறைவு செய்ய எடுக்கும் காலம் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2528/ '12

கௌரவ அனுர திஸாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2005 தொடக்கம் 2010 வரையிலான காலப்பகுதியினுள்,

(i) சீருடைத் துணிகளைப் பெற்றுக் கொண்ட பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) பாடசாலை சீருடைகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்

வருட ரீதியில் வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) 2005 தொடக்கம் 2011 வரையிலான காலப்பகுதியினுள்,

(i) பாடசாலை சீருடைகளை வழங்குவதற்காக உள்நாட்டு ரீதியில் கொள்வனவு செய்யப்பட்ட துணிகளின் மொத்த அளவு யாதென்பதையும்;

(ii) இதற்காக இறக்குமதி செய்யப்பட்ட துணிகளின் மொத்த அளவு யாதென்பதையும்

வருட ரீதியில் வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இறக்குமதி செய்யப்பட்ட பாடசாலை சீருடைத் துணிகளின் தரத்தையும் தராதரத்தையும் பரிசோதித்தவர்கள் யாவர் என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இதுவரை பூர்த்தி செய்யப்படாதுள்ள 2012 ஆம் ஆண்டுக்கான பாடசாலை சீருடை வழங்கும் பணிகளை முடிவுறுத்தும் திகதி யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2782/ '12

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முப்படைகளில் பணியாற்றும் படை வீரர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் 22 வருட சேவைக் காலத்தின் பின்னர் ஓய்வு பெறுவதற்கான உரிமை காணப்படுகின்றதா;

(ii) மேற்குறிப்பிடப்பட்ட படை வீரர்களினதும் உத்தியோகத்தர்களினதும் ஓய்வூதியம் கணிப்பிடப்படும் அடிப்படை யாது;

(iii) 22 வருட சேவைக் கால முடிவில் ஓய்வு பெறுகின்ற, வட - கிழக்கு இராணுவ நடவடிக்கைக் கடமைகளின்போது காயமுற்று அங்கவீனர்களான படை வீரர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் இவர்களது பலவீனத்தைக் கருத்தில்கொண்டு விஷேட கொடுப்பனவொன்று ஓய்வூதியத்துடன் சேர்க்கப்படுமா;

(iv) ஆமெனில், வலதுகுறைந்த படை வீரர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்படும் மேற்படி கொடுப்பனவு எவ்வாறு கணிப்பிடப்பட்டது;

(v) மேற்குறிப்பிடப்பட்ட விஷேட கொடுப்பனவை வழங்குதல் தற்போது நிறுத்தப்பட்டுள்ளதா;

(vi) ஆமெனில், அதற்கான காரணம் யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2994/ '12

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— பொது நிர்வாக, உள்ளாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்க சேவையில் தற்போது காணப்படுகின்ற மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி வெற்றிடங்களின் எண்ணிக்கை பதவிப் பெயர்களுக்கு அமைய தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iii) அண்மையில் அபிவிருத்தி உதவியாளர்களாக ஆட்சேர்க்கப்பட்டு தற்போது பிரதேச செயலகங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள மொத்தப் பட்டதாரிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iv) அவ்வாறு ஆட்சேர்க்கப்பட்ட பட்டதாரிகளின் எண்ணிக்கை மாகாண ரீதியாக தனித்தனியே எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3002/ '12

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஐந்நூறு மில்லியன் அமெரிக்க டொலருக்கான இலங்கையின் முதலாவது தங்க முறியின் தவணை 2012ஆம் ஆண்டு ஒக்டோபரில் முடிந்திருந்ததை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்சொன்ன முறியின் சரியான வழங்கல் திகதி, வட்டி வீதம் மற்றும் அதன் முதிர்வுத் திகதி யாவை என்பதையும்;

(ii) வழங்கும் திகதியிலுள்ளவாறு மேற்படி முறிக்கு வருவாய்க்குச் சமனான தொகையை இலங்கை ரூபாவில் யாதென்பதையும்;

(iii) மேற்படி முறியின் வருவாய் உபயோகிக்கப்பட்ட குறிப்பிட்ட நோக்கங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி முறியின் மீள்கொடுப்பனவு தொடர்பாக மேலே (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அவ்வாறான உபயோகங்கள் (முதலீடுகள்) மூலம் ஈட்டிய வகைப்படுத்தப்பட்ட வருவாய் ஏதும் இருப்பின், அவை யாதென்பதையும்;

(v) மூலதனம் மற்றும் வட்டியை உள்ளிட்ட மேற்படி முறியின் மொத்த மீள் கொடுப்பனவுத் தொகையை அமெரிக்க டொலரிலும் அதற்குச் சமனான இலங்கை ரூபாவிலும் வட்டி செலுத்தப்பட்ட ஒவ்வொரு திகதியின் மற்றும் முதிர்வுத் திகதியின் அடிப்படையில் தனித்தனியாக யாதென்பதையும்;

(vi) நாணய மதிப்பிறக்கம் காரணமாக மேலதிகமாகக் கொடுக்கப்படவேண்டிய தொகை மற்றும் வட்டிக் கூறு ஆகியவற்றைத் தனித்தனியாகவும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1899/ ’11

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி மாவட்டத்தின் எல்பிட்டிய வலயக்கல்வி காரியாலத்திற்கு உரித்தாயிருந்த இம்புல்பிட்டிய, கா/ராமதொல கனிஷ்ட வித்தியாலயம் இற்றைக்கு சில வருடங்களுக்கு முன்னர் மூடப்பட்டமையினால் கட்டிடங்கள் உள்ளிட்ட ஏனைய வளங்கள் அழிவடைந்து வருகின்றன என்பதையும்;

(ii) தற்போது மேற்படி பாடசாலைக்கான நிலத்தை அயலவர்கள் கைப்பற்றக்கூடிய ஆபத்தான நிலைமை காணப்படுகின்றதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) பலவந்தமாக பாடசாலைக் காணியை கைப்பற்றுவதை நிறுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) கா/ராமதொல கனிஷ்ட வித்தியாலயத்திற்குச் சொந்தமான நிலத்தையும் கட்டிடங்களையும் பயனுள்ள வேறு நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில் அத்திட்டம் யாதென்பதையும்;

(iv) இதற்காக நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2239/ ’12

கௌரவ ரவி கருணாநாயக்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தெற்கு அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணிக்கப்பட வேண்டும் என எப்போது முன்மொழியப்பட்டதென்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணத்துக்காக ஆரம்பத்தில் மதிப்பிடப்பட்ட தொகையினையும்;

(iii) தெற்கு அதிவேக நெடுஞ்சாலைக்காக இற்றை வரையில் செலவழிக்கப்பட்ட மொத்தச் செலவினம் யாதென்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் தூரத்தினை கிலோ மீற்றர்கள் யாதென்பதையும்;

(ii) தெற்கு அதிவேக நெடுஞ்சாலை காலியிலிருந்து மாத்தறை வரை விஸ்தரிக்கப்படவுள்ளதா என்பதையும்;

(iii) அதிவேக நெடுஞ்சாலையின் நுழைவுக் கட்டணமாக ஆரம்ப இடத்திலிருந்து முடிவிடம் வரை சேகரிக்கப்பட்ட தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2263/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிரதி அமைச்சர் ஒருவரின் பாதுகாப்பிற்காக வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு அலுவலர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி பாதுகாப்பு அலுவலர்கள், பொலிஸ் அலுவலர்களா, அமைச்சர்களுக்கான பாதுகாப்பு பிரிவின் அலுவலர்களா அல்லது இராணுவ அலுவலர்களா என்பதையும்;

(iii) மேற்படி அலுவலர்களுக்கு மேலதிகமாக பிற ஆட்களும் பிரதி அமைச்சர்களின் பாதுகாப்புக்காக வழங்கப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அவர்கள் யாவர் என்பதையும்;

(v) பாதுகாப்புக்காக மேற்படி ஆட்களை ஈடுபடுத்தியுள்ள பிரதி அமைச்சர்கள் யாவர் என்பதையும்;

(vi) பிரதி அமைச்சர்களின் பாதுகாப்புக்காக அவ்வாறான ஆட்களைப் பயன்படுத்துவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேலே (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரதி அமைச்சர் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ள பின்வரிசை அணி வாகனங்களின் (Backup vehicles) எண்ணிக்கை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2330/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை பொலிஸ் சேவைக்கு உதவுவதற்காக 2006.08.02 ஆம் திகதிய 16/1395/206/052ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய சிவில் பாதுகாப்புத் திணைக்களம் தாபிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) யுத்த சூழல் நிலவிய காலத்தில், தேசிய முக்கியத்துவம்மிக்க வைபவங்கள் மற்றும் பல்வேறு அனர்த்த சந்தர்ப்பங்களில் சிவில் பாதுகாப்பு அலுவலர்கள் பூரண அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளார்கள் என்பதையும்;

(iii) சிவில் பாதுகாப்புத் திணைக்களம் 2009.12.15 ஆம் திகதி வெளியிட்டுள்ள சுற்றறிக்கைக்கு அமைய 2009.10.31ஆம் திகதியன்று தொடர்ச்சியாக 180 நாட்கள் சேவையை பூர்த்தி செய்துள்ள அலுவலர்களின் சேவையை துரிதமாக நிரந்தரமாக்குவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போது சிவில் பாதுகாப்புச் சேவையில் ஈடுபட்டுள்ள பணியாட்டொகுதி எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி சேவையின் பல்வேறு துறைகளிலும் கடமையாற்றுகின்ற ஒவ்வொரு அலுவலருக்கும் தற்போது செலுத்தப்படுகின்ற நாளாந்தச் சம்பளம் எவ்வளவு என்பதையும்;

(iii) நாளாந்த சம்பளத்திற்கு சேவையாற்றுகின்ற மேற்படி திணைக்கள ஊழியர்களின் சேவையை நிரந்தரமாக்கி நிலையான சம்பள நிலையில் வைத்து அரசாங்க ஊழியர்களுக்கு உரித்தான சகல சிறப்புரிமைகளையும் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(iv) அதற்கு எடுக்கும் காலவரையறை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2535/ '12

கௌரவ அனுர திஸாநாயக்க,— உயர்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 ஆம் ஆண்டில்,

(i) மாணவர் உதவுதொகையைப் பெற்றுள்ள பல்கலைக்கழக மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் ஏற்ப வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) பல்கலைக்கழக மாணவர்களுக்கு மாணவர் உதவுதொகையை பெற்றுக் கொடுப்பதற்காக செலவிடப்படுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மாணவர் உதவுதொகையை செலுத்துவதற்காக ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பல்கலைக்கழக மாணவர்களின் மாணவர் உதவுதொகைத் தவணைக் கொடுப்னவு இறுதியாக அதிகரிக்கப்பட்ட வருடம் யாதென்பதையும்;

(ii) அச்சந்தர்ப்பத்தில் தவணைத் தொகையாக அதிகரிக்கப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) தற்போது மாணவர் உதவுதொகையாக வழங்கப்படும் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி தவணைத் தொகையினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பாரா என்பதையும்;

(v) ஆமெனில், அத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2995/ ' 12

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 ஜுன் மாதம் அறியக் கிடைத்த தரம் குறைந்த பெற்றோல் நெருக்கடிக்கு மேலதிகமாக 2012 ஜுலை மாதம் 23 ஆம் திகதி தரம் குறைந்த டீசல் பற்றிய நெருக்கடியும் அறியக் கிடைத்துள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி அறிக்கைகளுக்கு அமைய தரம் குறைந்த டீசலை வழங்கியுள்ள நிறுவனம் யாது என்பதையும்;

(ii) தரமற்ற எண்ணெய் வழங்குதல் தொடர்பாக மேற்படி நிறுவனத்திற்கு எதிராக இதற்கு முன்னர் குற்றம் சாட்டப்படுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அத் திகதி யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும்போது எரிபொருளின் தரம் தொடர்பில் அத்தாட்சிப்படுத்துகின்ற முறையியல் யாது என்பதையும்;

(ii) எண்ணெய் இறக்குமதி செய்வதற்காக கேள்விப் பத்திரங்களைக் கோருவதற்கான அதிகாரத்தைக் கொண்ட நிறுவனம் யாது என்பதையும்;

(iii) கேள்விப் பத்திரக் குழுவை நியமிக்கின்ற அதிகாரி யார் என்பதையும்;

(iv) தரம் குறைவான டீசலை இறக்குமதி செய்வதில் தலையீடு செய்த கேள்விப் பத்திரக் குழுவின் உறுப்பினர்கள் யாவர் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தற்போது இலங்கைக்கு எண்ணெய் இறக்குமதி செய்வதற்காக பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(ii) அவற்றில் தற்போது செயலிழந்துள்ள நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iii) தற்போது கறைநிரல்படுத்தப்பட்டுள்ள நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iv) லோ சல்பர் (low sulphar) எரிபொருளை வழங்கும் நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

3003/ ' 12

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் அடிப்படையில் வாழ்க்கைச் செலவுப் படி எவ்வாறு கணிக்கப்படுகின்றது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அண்மைக்காலத்தில் வாழ்க்கைச் செலவுப் படியைக் கணிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் தொடர் மாற்றப்பட்டதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் அவ்வாறானதொரு மாற்றம் எப்போது மேற்கொள்ளப்பட்டதென்பதையும்;

(iii) மாற்றத்திற்கு முன்பும் மாற்றத்திற்குப் பின்பும் ஒவ்வொரு சுட்டிப் புள்ளிக்குமான அலகொன்றின் ரூபாய் பெறுமதி யாதென்பதையும்;

(iv) மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு அலகுக்கான ரூபாய் பெறுமதிகளிடையே வேறுபாடுகள் காணப்படுமாயின், புதிய பெறுமதி எவ்வாறு நியாயப்படுத்தப்படுகின்றது என்பதையும்;

(v) சுட்டியிலுள்ள ஒவ்வொரு புள்ளிக்கும் புதிய கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் தொடர் பயன்படுத்தப்படுவது அவசியமா அத்துடன் அல்லது திருத்திய அலகொன்றிற்கான ரூபாய் பெறுமதி அவசியமா என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2012 நவர்பர் 19, திங்கட்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1881/ '11

கௌரவ புத்திக பதிரண,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) குருணாகல் மாவட்டத்தின் கிரிபாவ பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள கிரிபாவ கேட்போர்கூடம் பயன்படுத்தப்படாது அழிவடைய விடப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கேட்போர்கூடத்தை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) அதற்கான நிதியத்தை வழங்கிய நிறுவனம் யாதென்பதையும்;

(iii) மேற்படி கட்டடம் இவ்வாறு அழிவடைவதற்கு விடப்பட்டுள்ளமைக்கான காரணம் யாதென்பதையும்;

(iv) கேட்போர்கூடத்தை பயன்படுத்துவதில் நிலவுகின்ற தடைகளை நீக்கி பொதுமக்களின் தேவைக்காக பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அதற்காக எடுக்கும் காலம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2241/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010 மற்றும் 2011ஆம்; ஆண்டுகளுக்களில்,

(i) பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சுக்கு சொந்தமல்லாத கட்டிடங்களின் வாடகைக்காக ஏற்பட்ட மொத்த செலவினத்தையும்;

(ii) தனித்தனியாக ஒவ்வொரு கட்டிடத்தினதும், சதுர அடிக்கான கட்டணம் மற்றும் குத்தகை அல்லது வாடகைக்கான காலப்பகுதியையும்;

(iii) அமைச்சுக்குச் சொந்தமில்லாத அமைப்புகளிடமிருந்து வாடகைக்கு அல்லது குத்தகைக்குப் பெற்ற வாகனங்கள் மீது செலவிடப்பட்ட மொத்தத் தொகையையும்;

(iv) வாடகைக்குப் பெறப்பட்ட அல்லது குத்தகைக்குப் பெறப்பட்ட மொத்த வாகனங்களின் எண்ணிக்கையையும்;

(v) அமைச்சினால் வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஏனைய சேவைகளையும்;

(vi) இவ்வாறு வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சேவைகள் மீது ஏற்பட்ட செலவினத்தையும்;

(vii) அமைச்சின் மொத்த பணியாட்டொகுதியினரின் எண்ணிக்கையையும்;

(viii) வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளல் அடிப்படையில் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட ஆட்களின் எண்ணிக்கையையும்

அவர் வெவ்வேறாகத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2264/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஒருவரின் பாதுகாப்பிற்காக வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு அலுவலர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி பாதுகாப்பு அலுவலர்கள், பொலிஸ் அலுவலர்களா, அமைச்சர்களுக்கான பாதுகாப்பு பிரிவின் அலுவலர்களா அல்லது இராணுவ அலுவலர்களா என்பதையும்;

(iii) மேற்படி அலுவலர்களுக்கு மேலதிகமாக பிற ஆட்களும் அமைச்சர்களின் பாதுகாப்புக்காக வழங்கப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அவர்கள் யாவர் என்பதையும்;

(v) பாதுகாப்புக்காக மேற்படி ஆட்களை ஈடுபடுத்தியுள்ள அமைச்சர்கள் யாவர் என்பதையும்;

(vi) அமைச்சர்களின் பாதுகாப்புக்காக அவ்வாறான ஆட்களைப் பயன்படுத்துவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேலே (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள அமைச்சர் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ள பின்வரிசை அணி வாகனங்களின் (Backup vehicles) எண்ணிக்கை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2331/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மத்திய அரசாங்கம் மற்றும் மாகாண சபைகளின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற பாடசாலைகளில் பௌத்த தர்மத்தைக் கற்பிக்க அவசியமான ஆசிரியர்களின் எண்ணிக்கை யாது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பௌத்த சமயத்தைக் கற்பிக்க பௌத்த தர்மாசார்ய பரீட்சையில் சித்தியடைந்தவர்களை ஆசிரியர் சேவைக்கு சேர்த்துக்கொள்ளல் சம்பந்தமாக අමප/10/2376/436/052 இலக்கத்தின் கீழ் 2010 ஒற்றோபர் 28 ஆந் திகதி அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) தற்போது பௌத்த தர்மாசார்ய பரீட்சையில் சித்தியடைந்துள்ளோர் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) அரசாங்க ஆசிரியர்களைச் சேர்த்துக் கொள்ளும் நடைமுறைக்கு அமைவாக பௌத்த சமயத்தைக் கற்பிக்கும் பொருட்டு பௌத்த தர்மாசார்ய பரீட்சையில் சித்தியடைந்தோரைச் சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி ஆட்சேர்ப்பினை எவ்வளவு காலத்திற்குள் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2012 நவர்பர் 20, செவ்வாய்க்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2057/ ' 11

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— நிதி திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (5)

(அ) (i) ஊழியர் சேமலாப நிதியினால் கடந்த இரண்டு வருடங்களாக கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட பட்டியலிடப்பட்ட பங்குகளின் சகல கொள்வனவுகள் மற்றும் விற்பனையினையும் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) ஒவ்வொரு பரிமாற்றத்திற்கும் பொறுப்பான தரகர்களின் பெயர்களையும்;

(iii) தரகுக் கட்டணங்களை வெவ்வேறாகக் குறிப்பிட்டு ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுக்கான செலவினையும்;

(iv) மேற்குறிப்பிட்ட 2 வருட காலப்பகுதியில் ஒவ்வொரு பங்குத் தரகர் கம்பனிக்கும் செலுத்தப்பட்ட தரகுக் கட்டணத்தினையும்

அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) மேலே (அ) (i) இல் தரப்பட்ட ஒவ்வொரு பங்குகளின் கொள்வனவு அல்லது விற்பனைக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய மற்றும் கொள்வனவு அல்லது விற்பனையிலிருந்து இரண்டு வாரங்களில் சந்தை நிறைவு பெறும் போதிருந்த விலையை அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2242/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2012ஆம் ஆண்டில்,

(i) நிதி, திட்டமிடல் அமைச்சுக்கு சொந்தமல்லாத கட்டிடங்களின் வாடகைக்காக ஏற்பட்ட மொத்த செலவினத்தையும்;

(ii) தனித்தனியாக ஒவ்வொரு கட்டிடத்தினதும், சதுர அடிக்கான கட்டணம் மற்றும் குத்தகை அல்லது வாடகைக்கான காலப்பகுதியையும்;

(iii) அமைச்சுக்குச் சொந்தமில்லாத அமைப்புகளிடமிருந்து வாடகைக்கு அல்லது குத்தகைக்குப் பெற்ற வாகனங்கள் மீது செலவிடப்பட்ட மொத்தத் தொகையையும்;

(iv) வாடகைக்குப் பெறப்பட்ட அல்லது குத்தகைக்குப் பெறப்பட்ட மொத்த வாகனங்களின் எண்ணிக்கையையும்;

(v) அமைச்சினால் வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஏனைய சேவைகளையும்;

(vi) இவ்வாறு வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சேவைகள் மீது ஏற்பட்ட செலவினத்தையும்;

(vii) அமைச்சின் மொத்த பணியாட்டொகுதியினரின் எண்ணிக்கையையும்;

(viii) வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளல் அடிப்படையில் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட ஆட்களின் எண்ணிக்கையையும்

அவர் வெவ்வேறாகத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2265/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைப் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கண்காணிப்பு அமைச்சர் ஒருவரின் பாதுகாப்பிற்காக வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு அலுவலர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி பாதுகாப்பு அலுவலர்கள், பொலிஸ் அலுவலர்களா, அமைச்சர்களுக்கான பாதுகாப்பு பிரிவின் அலுவலர்களா அல்லது இராணுவ அலுவலர்களா என்பதையும்;

(iii) மேற்படி அலுவலர்களுக்கு மேலதிகமாக பிற ஆட்களும் கண்காணிப்பு அமைச்சர்களின் பாதுகாப்புக்காக வழங்கப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அவர்கள் யாவர் என்பதையும்;

(v) பாதுகாப்புக்காக மேற்படி ஆட்களை ஈடுபடுத்தியுள்ள கண்காணிப்பு அமைச்சர்கள் யாவர் என்பதையும்;

(vi) கண்காணிப்பு அமைச்சர்களின் பாதுகாப்புக்காக அவ்வாறான ஆட்களைப் பயன்படுத்துவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேலே (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள கண்காணிப்பு அமைச்சர் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ள பின்வரிசை அணி வாகனங்களின் (Backup vehicles) எண்ணிக்கை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2332/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திஸ்ஸமகாராம பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்திற்குரிய கிரிந்த கிராம உத்தியோகத்தர் பிரிவிலிருந்து ரன்மினிதென்ன வரையிலான பிரதேசத்தில் 25 வருடங்களுக்கு மேலாக சேனைப் பயிர்ச் செய்கை செய்து வாழ்க்கை நடாத்தும் சுமார் 5000 விவசாயக் குடும்பங்கள் இருக்கின்றனர் என்பதையும்;

(ii) 2007ஆம் ஆண்டு காடு பேணல் திணைக்களத்தினால் காணித் தொகை மதிப்பீடு எனக் கூறி இவ்விவசாயக் காணிகளை நில அளவை செய்து எல்லைக் கற்கள் நடப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) இவ்வாறு நில அளவை செய்யப்பட்ட விவசாயக் காணிகளை சுவீகரிக்கும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இவ் விவசாயக் காணிகள் சுவீகரிக்கப்படுவதை நிறுத்த நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) விவசாயக் காணிகளை சுவீகரிப்பதனால் காணிகளை இழந்த விவசாயிகளுக்கு தமது வாழ்க்கையைக் கொண்டு நடாத்துவதற்காக இப்பிரதேசத்தில் ஒரு ஏக்கர் காணியை வழங்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(iii) இவ்விடயம் எவ்வளவு காலத்தில் நிறைவு செய்யப்படும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2012 நவம்பர் 21, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1939/ '11

கௌரவ புத்திக பத்திரன,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) காலி மாவட்டத்தின் பத்தேகம பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள மாபொட்டுவன சனசமூக நிலையத்தை புனரமைப்பதற்காக தெற்கு அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி சனசமூக நிலையம் தற்போது ஓர் கட்டிடத்துக்கும் பெயர் பலகைக்கும் மாத்திரம் வரையறுக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) பணம் செலவிடப்பட்டு புனரமைக்கப்பட்ட மேற்படி கட்டிடம் பயன்படுத்தப்படாது கைவிடப்பட்டுள்ளமை பெரும் தவறாகும் என்பதையும்

அவர் ஏற்றுக் கொள்வாரா?

(இ) அவ்வாறெனின், தற்போதுள்ள குறைபாடுகளை துரிதமாக நிவர்த்தி செய்து பொது மக்களின் பயன்பாட்டுக்காக மேற்படி சனசமூக நிலையத்தை திறந்து வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2243/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2012ஆம் ஆண்டில்,

(i) வெகுசன ஊடக, தகவல் அமைச்சுக்கு சொந்தமல்லாத கட்டிடங்களின் வாடகைக்காக ஏற்பட்ட மொத்த செலவினத்தையும்;

(ii) தனித்தனியாக ஒவ்வொரு கட்டிடத்தினதும், சதுர அடிக்கான கட்டணம் மற்றும் குத்தகை அல்லது வாடகைக்கான காலப்பகுதியையும்;

(iii) அமைச்சுக்குச் சொந்தமில்லாத அமைப்புகளிடமிருந்து வாடகைக்கு அல்லது குத்தகைக்குப் பெற்ற வாகனங்கள் மீது செலவிடப்பட்ட மொத்தத் தொகையையும்;

(iv) வாடகைக்குப் பெறப்பட்ட அல்லது குத்தகைக்குப் பெறப்பட்ட மொத்த வாகனங்களின் எண்ணிக்கையையும்;

(v) அமைச்சினால் வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஏனைய சேவைகளையும்;

(vi) இவ்வாறு வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சேவைகள் மீது ஏற்பட்ட செலவினத்தையும்;

(vii) அமைச்சின் மொத்த பணியாட்டொகுதியினரின் எண்ணிக்கையையும்;

(viii) வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளல் அடிப்படையில் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட ஆட்களின் எண்ணிக்கையையும்

அவர் வெவ்வேறாகத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2272/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான கொழும்பு மாளிகாவத்தை தேசிய வீடமைப்புத் திட்டத்தின் ஈ2/2/2/ இலக்கமுடைய வீடமைப்புக் கூறின் உரிமையாளரது பெயர் யாதென்பதையும்;:

(ii) மேற்படி வீடமைப்புக் கூறினைப் பயன்படுத்துபவர்களால் திட்டத்திற்கு அமைந்தொழுகாத வகையில் அவ்வீடமைப்புக் கூறினை மாற்றத்திற்கு உட்படுத்துதலோ அல்லது விரிவாக்குதலோ மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்கான அனுமதி பெறப்பட்டுள்ளதா என்தையும்;

(iv) அனுமதி வழங்கப்பட்டிருப்பின், அந்த ஆவணங்களைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) மேற்படி மாற்றங்களைச் செய்வதற்கான அனுமதி வழங்கிய அதிகாரி யார் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி வீடமைப்புக் கூறில் மாற்றியமைக்கப்பட்டுள்ள பகுதிகளை அகற்றுவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அகற்றும் திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி மாற்றியமைக்கப்பட்ட பகுதிகளை அகற்றாதிருப்பின் அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2333/ ' 12

கௌரவ சஜித் பிரேமதாச,— பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2004 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளில் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சம்பள மாற்றங்களுக்கு ஒத்ததாக 2006.01.01ஆம் திகதிக்கு முன்பு ஓய்வுபெற்ற அரச ஊழியர்களின் ஓய்வூதிய முரண்பாட்டை நீக்குவதற்கும்;

(ii) சம்பள முரண்பாடுகளை நீக்குவது பற்றி கவனத்திற்கொள்வதற்காக பல சந்தர்ப்பங்களிலும் நியமிக்கப்பட்ட குழுக்களின் அறிக்கைகளிலுள்ள சிபாரிசுகளைக் கவனத்திற் கொண்டு இச்சம்பள முரண்பாடுகளை நீக்கும் பொது படிகளுக்குப் பதிலாக அதிகரிக்கும் பெறுமானங்களை திரட்டிய சம்பளத்துக்குச் சேர்ப்பதற்கும்

அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஆ) (i) 2004 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளில் ஓய்வுபெற்ற அரச ஊழியர்களின் ஓய்வூதியத்துக்கு 2012 வரவு செலவு அறிக்கை மூலம் போதியளவான கொடுப்பனவொன்று சேர்க்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அரச ஊழியர்களுக்கு ஏதேனும் சம்பள மாற்றம் நடைபெறுமாயின் அதற்கேற்றவாறு அனைத்து ஓய்வூதியம் பெறுநர்களுக்கும் குறிப்பிட்ட அதிகரிப்பை வழங்கும் தேசியக் கொள்கையை பாராளுமன்ற சட்டமொன்றின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்

(iii) அவ்வாறாயின் அதற்கு எவ்வளவு காலம் தேவைப்படும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2012 நவம்பர் 22, வியாழக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1940/ '11

கௌரவ புத்திக பதிரண,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை துறைமுக அதிகார சபையில் பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்கென ஒதுக்கப்பட்டிருந்த 04 ஆம் இலக்க களஞ்சியசாலை மன்னாரில் எண்ணெய் அகழ்வில் ஈடுபட்டுள்ள ஒரு இந்தியக் கம்பனிக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இக்களஞ்சியசாலை இந்தியக் கம்பனிக்கு வழங்கப்பட்டமைமைக்கான காரணங்கள் யாவை;

(ii) இது எந்த அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது;

(iii) இக் களஞ்சியசாலை இந்தியக் கம்பனியொன்றுக்கு வழங்கப்பட்டதன் மூலம் எதிர்பார்க்கப்படும் வருமானம் யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2244/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2012 ஆம் ஆண்டில்,

(i) சுகாதார அமைச்சுக்கு சொந்தமல்லாத கட்டிடங்களின் வாடகைக்காக ஏற்பட்ட மொத்த செலவினத்தையும்;

(ii) தனித்தனியாக ஒவ்வொரு கட்டிடத்தினதும், சதுர அடிக்கான கட்டணம் மற்றும் குத்தகை அல்லது வாடகைக்கான காலப்பகுதியையும்;

(iii) அமைச்சுக்குச் சொந்தமில்லாத அமைப்புகளிடமிருந்து வாடகைக்கு அல்லது குத்தகைக்குப் பெற்ற வாகனங்கள் மீது செலவிடப்பட்ட மொத்தத் தொகையையும்;

(iv) வாடகைக்குப் பெறப்பட்ட அல்லது குத்தகைக்குப் பெறப்பட்ட மொத்த வாகனங்களின் எண்ணிக்கையையும்;

(v) அமைச்சினால் வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஏனைய சேவைகளையும்;

(vi) இவ்வாறு வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சேவைகள் மீது ஏற்பட்ட செலவினத்தையும்;

(vii) அமைச்சின் மொத்த பணியாட்டொகுதியினரின் எண்ணிக்கையையும்;

(viii) வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளல் அடிப்படையில் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட ஆட்களின் எண்ணிக்கையையும்

அவர் வெவ்வேறாகத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2273/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011ஆம் ஆண்டில் கல்விப் பொதுத் தராதர (உயர்தரப்) பரீட்சை நடைபெற்ற திகதி யாதென்பதையும்;

(ii) இப்பரீட்சையின் பெறுபேறுகள் வெளியிடப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) வெளியிடப்பட்ட பெறுபேறுகளை செல்லுபடியற்றதாக்கிவிட்டு மீண்டும் பெறுபேறுகள் வெளியிடப்பட்டதா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2011 உயர் தரப் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியிடப்படுகையில் ஏற்பட்ட சிக்கலான நிலைமைக்குப் பொறுப்புக் கூறவேண்டியவர்கள் யாவர் என்பதையும்;

(ii) இவர்கள் தொடர்பாக மேற்கொள்ளவிருக்கும் அல்லது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) பெறுபேறுகள் திருத்தப்பட்டதனால் எதிர்பார்ப்புகள் நிறைவேறாது அசௌகரியத்துக்கு உள்ளான தரப்பினர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) எதிர்காலத்தில் பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பான சிக்கல்களைத் தவிர்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2334/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— சுதேச மருத்துவத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மகிந்த சிந்தனை எதிர்கால தொலைநோக்குக் கொள்கைத் திட்டதின் கீழ் பாரம்பரிய சுதேச மருத்துவர்களுக்கான ஓய்வூதியத் திட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டிருந்ததென்பதையும்;

(ஆ) (i) தற்போது மேற்படி ஓய்வூதியத் திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் பயனாளிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2012 நவர்பர் 23, வெள்ளிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1941/ '11

கௌரவ புத்திக பத்திரன,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் அக்குரஸ்ஸ பிரதேசத்தில் அமைந்துள்ள அலபலாதெனிய பிரதேச தேயிலை விஸ்தரிப்பு நிலையத்துக்குரிய கட்டிடங்கள் மற்றும் தேயிலைச் செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலம் பயன்படுத்தாமல் கைவிடப்பட்டுள்ளமையினால் காடடர்ந்து வருகின்றதென்பதையும்;

(ii) மேற்படி நிலையம் பயன்படுத்தப்படாமல் கைவிடப்பட்டிருப்பது பெரும் தவறாகும் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) அலபலாதெனிய பிரதேச தேயிலை விஸ்தரிப்பு நிலையம் கைவிடப்பட்டமைக்கான காரணம் யாதென்பதையும்;

(ii) மேற்படி நிலையத்தை புனரமைத்து அதன் மூலம் பிரதேசத்தின் தேயிலைச் செய்கையாளர்களின் துறைசார்ந்த பிரச்சினைகளுக்கு ஆலோசனை வழங்க நடவடிக்கை எடுப்பாரா;

(iii) அதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2245/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள உலக மரபுரிமைகள் மற்றும் தலங்கள் யாதென்பதையும்;

(ii) இவ்வெழில்மிகு தலங்களை பராமரிப்பதற்கும் செம்மையாக வைத்திருப்பதற்கும் செலவிடப்பட்ட பணத்தின் அளவு யாதென்பதையும்;

(iii) கடந்த மூன்று வருடங்களில் இந்த உள்ளூர் உலக மரபுரிமை தலங்களுக்கு விஜயம் செய்த ஆட்களின் எண்ணிக்கை ஆண்டு ரீதியாக யாதென்பதையும்;

(iv) கடந்த மூன்று வருடங்களில் அத்தலங்களில் பெற்றுக் கொண்ட வருமானம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) மேற்குறிப்பிட்ட தலங்களில் 2010 ஆம், 2011 ஆம் ஆண்டுகளில் நேரடியாகவும் மறைமுகமாகவும் சேவையில் ஈடுபட்டிருந்தோரின் எண்ணிக்கையை தனித்தனியாக கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2274/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிர்மாண, பொறியியல் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) டெங்கோ சேவா எனும் பெயரில் ஆரம்பிக்கப்பட்டு பின்பு புஜீமா ஸ்டேட் கோபரேஷன் கம்பனி எனும் பெயரில் நடாத்தப்பட்டுவரும் நிறுவனத்திற்குச் சொந்தமான கொட்டதெனியாவ வேலைத்தலம் இப்போது செயற்பட்டுவருகிறதா என்பதையும்;

(ii) அங்கு பணிபுரியும் ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இவர்களின் சம்பளம் இதுவரை செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட நிறுவனத்திற்குச் சொந்தமான இயந்திரப் பொறிகள் மற்றும் வாகனங்கள் யாவை என்பதையும்;

(ii) இந்த இயந்திரப் பொறிகள் மற்றும் வாகனங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) இவ் வேலைத்தலத்தை அமைவிடத்திலிருந்து அகற்றுவதற்கோ, இயந்திரப் பொறிகளை அகற்றி ஏல விற்பனை செய்வதற்கோ, விற்பனை செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) ஆரம்பித்த வருடம் முதல் இதவரை இந்த வேலைத்தலத்திற்குக் கிடைத்த இலாபம் அல்லது நட்டம் வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) இத்தொழிற்சாலையை அரசின் அபிவிருத்தி வேலைகளுக்குப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அது எப்போது தொடக்கம் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2335/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மகிந்த சிந்தனை எதிர்கால தொலைநோக்குக் கொள்கைத் திட்டதின் கீழ் தாதியர் சேவைக்கான தேசியக் கொள்கையொன்றை தயாரிப்பதற்காக வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) தற்போது மேற்படி கொள்கை தயாரித்து முடிக்கப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2012 நவர்பர் 24, சனிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1942/ '11

கௌரவ புத்திக பதிரண,— அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(ஆ) எம்பிலிப்பிட்டிய கடுதாசி தொழிற்சாலை மற்றும் கந்தளாயில் அமைந்துள்ள சீனித் தொழிற்சாலை ஆகியவற்றை ஸெிநாட்டுக் கம்பனிகளுக்கு விற்பதற்கான திட்டமொன்று இருப்பதை அவர் அறிவாரா;

(ஆ) (i) அவ்வாறெனின், அந்த இரண்டு நிறுவனங்களையும் விற்பதற்கு எதிர்பார்க்கப்படும் கம்பனிகளின் பெயர்கள் மற்றும் அந்த கம்பனிகள் உரித்தாயுள்ள நாடுகளின் பெயர்களை தனித்தனியாக குறிப்பிடுவாரா;

(ii) மேற்படி நிறுவனங்கள் விற்கப்படுகின்றபோது விலை மனுக்கள் கோரப்பட்டதா;

(iii) அவ்வாறெனின், அதற்காக விண்ணப்பங்களை சமர்பித்த கம்பனிகள் மற்றும் அவை உரித்தாயுள்ள நாடுகளின் பெயர்கள் யாவை;

(iv) மேற்படி ஒவ்வொரு நிறுவனமும் சமர்ப்பித்த விலைகள் தனித்தனியாக யாது;

(v) மேற்படி நிறுவனங்களை விற்பதன் மூலம் அரசாங்கம் எதிர்பார்க்கும் மொத்த வருமானம் எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) மேற்கூறிய நிறுவனங்களை விற்பதானது, அரச நிறுவனங்களை விற்பனை செய்வதில்லை என மகிந்த சிந்தனையில் குறிப்பிடப்பட்டுள்ள கூற்றுக்கு முரணானது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2275/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வனசீவராசிகள் பாதுகப்புத் திணைக்களத்திற்குரிய தேசிய பூங்காக்களில் பணிபுரியும் தொண்டர் வழிகாட்டிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) இவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புகள் யாவை என்பதையும்;

(iii) இவர்களின் மாதாந்த அல்லது நாளாந்த சம்பளம் அல்லது கொடுப்பனவு எவ்வளவு என்பதையும்;

(iv) வன விலங்குகளுடன் தொடர்புடைய துறையில் பணிபுரியும் இக்குழுவினருக்கு சேவைக்காலத்தில் ஏற்படும் இடர்களின் போது வழங்கப்படும் கொடுப்பனவுகள் அல்லது சிறப்புரிமைகள் யாவை யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தொண்டர் ஊழியர்களாக சேர்த்துக்கொள்ளப்பட்டு இதுவரை நிரந்தரமாக்கப்பட்டுள்ள வழிகாட்டிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) நிரந்தரமாக்கப்படாத வழிகாட்டிகளின் சேவை நிரந்தரமாக்கப்படுமா என்பதையும்;

(iii) இவ்வழிகாட்டிகளின் சம்பளத்தை அல்லது கொடுப்பனவை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2313/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் மாதாந்த வருமானம் யாதென்பதையும்;

(ii) தெற்கு அதிவேக நெடுஞ்சாலையினூடாக மாதாந்தம் செல்லுகின்ற வாகனங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) அ(ii) இல் குறிப்பிடப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை தெற்கு அதிவேக நெடுஞ்சாலை பற்றித் திட்டமிடும் போது எதிர்பார்க்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கையுடன் ஒத்திசைகின்றதா என்பதையும்;

(iv) இன்றேல், கருத்திட்டத்தின் ஆரம்பத்தின் போது வாகன நகர்வின் எதிர்வுகூறலையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணத்துக்காக பெறப்பட்ட கடனை மீளச் செலுத்தும் கால அளவு யாதென்பதையும்;

(ii) அனைத்துக் கடன் வழங்குநர்களுக்கும் வருடாந்தம் செலுத்த வேண்டிய மொத்தச் செலவினம் (மூலதனம் + வட்டி) யாதென்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2336/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கு கொள்கைத்திட்டத்தின் கீழ் புற்றுநோய் போன்ற தொற்றாத நோய்களை முழுமையாக கட்டுப்படுத்துவதற்கான விதப்புரைகளை சமர்ப்பிப்பதற்கும் அது சம்பந்தமான செயற்பாட்டுத் திட்டமொன்றை சமர்ப்பிப்பதற்கும் கல்விமான்களைக் கொண்ட சுயாதீனமான செயலணியொன்றை அமைப்பதற்கும் ஆறு மாதங்களினுள் சம்பந்தப்பட்ட விடயங்களை பூர்த்தி செய்வதற்கும் உறுதிமொழி அளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி செயலணியில் உள்ளடங்கியுள்ள கல்விமான்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இதன் மூலமாக சமர்ப்பிக்கப்பட்ட விதப்புரைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2012 நவர்பர் 26, திங்கட்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1943/ '11

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை மாவட்டத்தின் பண்டாரகம மில்லனிய பிரதேச செயலாளர் பிரிவில் தெல்கட அம்பிலகந்த என்ற அரசுக்கு சொந்தமான காணியில் பண்டாரகம பிரதேச சபையினால் பேணிவரப்பட்ட இயந்திரத்தினால் கருங்கற்களை உடைக்கின்ற நிலையத்தை ஆரம்பிப்பதற்காக செலவு செய்யப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) அதற்காக நிதியங்கள் பெறப்பட்ட வழிமுறைகள் எவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடம் செல்வதற்கு முன்னர் இந்த கருங்கல் உடைக்கும் நிலையம் மூடப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி நிலையத்துக்தகுத் தேவையான இயந்திர உபகரணங்கள் உரிய கேள்விப்பத்திர நடைமுறைகளுக்கு அப்பாற்பட்ட வகையில் உள்ளூராட்சி ஆணையாளரின் அனுமதி இன்றி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) மேற்படி நிலையத்தின் பணிகள் உரிய முறையியல்களுக்கு அப்பாட்பட்ட வகையில் தான்தோன்றித்தனமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதால் பிரதேச மக்களுக்குரிய பெருந் தொகை பணம் விரயமாகியுள்ளது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) அவ்வாறெனின் அது தொடர்பாக முறைசார்ந்த விசாரணையொன்றை நடத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2276/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பல்கலைக்கழகங்களின் பாதுகாப்புப் பணிகளை ரக்னா ஆரக்ஷண லங்கா கம்பனிக்கு ஒப்படைப்பதற்கு முன்னர் மேற்படி பாதுகாப்புப் பணிகளுக்கு பொறுப்பாக செயற்பட்ட உத்தியோகத்தர்கள் உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட கால எல்லையின் படி கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பின், மேற்படி கால எல்லை முடிவடைவதற்குரிய திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி தினத்திற்கு முன்னர் இவர்கள் நீக்கப்பட்டிருப்பின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட கால எல்லைக்கு முன்னர் தமது தொழில்களை இழந்து மிகவும் கஷ்டங்களுக்கு உள்ளாகியுள்ள மேற்படி பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவது சம்பந்தமாக அரசாங்கம் மேற்கோள்கின்ற நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2314/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— தொழில், தொழில் உறவுகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இற்றைவரை,

(i) நாட்டிலுள்ள ஊழியர்களுக்குரிய ஊழியர் சேமலாப நிதியின் மொத்தப் பெறுமதி யாதென்பதையும்;

(ii) ஊழியர் சேமலாப நிதியம் முதலீடு செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள் யாவையென்தையும்;

(iii) ஊழியர் சேமலாப நிதியத்திலுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) ஊழியர் சேமலாப நிதியத்தின் இசைவற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) இசைவற்ற ஊழியர் சேமலாப நிதிய உறுப்பினர்களுக்குரிய பணம் ஏன் அறவிடப்படவில்லை என்பதையும்;

(vi) அறவிடப்படாத உறுப்பினர்களின் பணப் பெறுமதி யாதென்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2337/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கு கொள்கைத்திட்டத்தின் கீழ் வயோதிபர்களின் மனநலனை பேணுவதற்காக விசேட சுகாதார நிலையங்கள் நாடளாவிய ரீதியில் தாபிக்கப்படுமென வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி விசேட சுகாதார நிலையங்களை தாபிப்பதற்கு ஏற்கனவே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நிலையங்கள் எம்மாவட்டங்களில் ஆரம்பிக்கப்படும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2012 நவம்பர் 28, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1944/ '11

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் முலட்டியன வலய கல்வி அலுவலகத்தினால் நிருவாகிக்ககப்படும் மார/ தெய்யந்தர ஆரம்ப பாடசாலையை தற்போது இருக்கும் இடத்தில் இருந்து வேறொரு இடத்துக்கு எடுத்துச் செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், பாடசாலை புதிதாக நிறுவப்படவுள்ள இடம் எது;

(iii) அதற்காக திட்டமிடப்பட்டுள்ளதா;

(iv) அதற்கான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா;

(v) ஆமெனில், புதிய பாடசாலையின் நிர்மாணப் பணிகள் எப்போது ஆரம்பிக்கப்படும்

என்பதை அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2277/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சமூக சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் உள்ள எவ்விதமான வருமானத்துக்கும் உரிமைகோராத, ஊனமுற்ற நபர்கள் மற்றும் வயோதிபர்களைக்கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கை அண்ணளவாக எவ்வளவென்பதையும்;

(ii) 2005 மஹிந்த சிந்தனை கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள " எவ்வித வருமானத்துக்கும் உரிமைகோராத ஊனமுற்றவர்களைக்கொண்ட குடும்பமொன்றுக்கு மாதந்தம் ரூ. 3,000 பெற்றுக்கொடுப்பேன்" எனும் வாக்குறுதியின் படி தற்போது மேற்படி பணம் வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில்,மேற்படி பிரதிபலனைப் பெறுகின்ற குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) 2005 ஆம் ஆண்டு முதல் இற்றை வரை மேற்படி பணத்தை வழங்குவதற்காக செலவிடப்பட்டுள்ள தொகை வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி (அ) ii இல் குறிப்பிடப்பட்டுள்ள வாக்குறுதி தற்போது நிறைவேற்றப்டுவதில்லையெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2315/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— தொழில், தொழில் உறவுகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1958 ஆம் ஆண்டின் ஊழியர் சேமலாப நிதியச் (EPF) சட்டம் 2012 சனவரி 18ஆம் திகதியன்று திருத்தப்பட்டமையையும்;

(ii) காணி கொள்வனவு செய்வதற்கும் கட்டிடமொன்றை நிர்மானிப்பதற்கும் ஊழியர் சேமலாப நிதியத்திலுள்ள பணத்தை உபயோகப்படுத்தக்கூடியவாறு திருத்தம் மேற்கொள்ளப்பட்டமையையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்சொன்ன கட்டிடத்திற்கென மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தச் செலவினத்தையும்;

(ii) அக்கட்டிடத்தின் ஒரு சதுர அடிக்கு மதிப்பீடு செய்யப்பட்ட செலவினத்தையும்;

(iii) அக்கட்டிட நிர்மாணத்திற்குக் கோரப்பட்ட கேள்விப்பத்திரங்களின் பெயர்கள் மற்றும் ஒவ்வொரு கேள்விப் பத்திரதாரரினதும் வினைமனுப் பெறுமதி ஆகியவற்றை வெவ்வேறாகவும்;

(iv) அக்கட்டிடத்தின் தேவைப்பாட்டை 35 மாடிகளாக திட்டமிடலுக்குப் பொறுப்பாகவிருந்த நபரையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) கட்டிட நிர்மாணங்களில் ஊழியர் சேமலாப நிதியம் ஏன் வீண்விரயம் செய்யப்படுகின்றதென்பதையும்;

(ii) மேற்படி பணிக்காக அரச நிதியங்கள் பயன்படுத்தப்படாமைக்கான காரணத்தையும்

அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2339/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மகிந்த சிந்தனை எதிர்கால நோக்கு கொள்கைத் திட்டத்தின் மூலம் இருதய நோயாளிகள் உட்பட உள ரீதியாக ஓய்வு தேவைப்படுகின்ற நோயாளிகளுக்காக திறந்தவெளிப் பூங்கா ஆஸ்பத்திரிகளை மாகாணத்திற்கு ஒன்று வீதம் தாபிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போது மேற்படி ஆஸ்பத்திரிகளை தாபிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி ஆஸ்பத்திரிகளை நிர்மாணித்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ள மாகாணங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2012 நவம்பர் 29, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1945/ '11

கௌரவ புத்திக பதிரண,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருணாகல் மாவட்டத்தில் குலியாப்பிட்டிய பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் கட்டுபொத்த நகரில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பேரூந்து தரிப்பு நிலையம் இற்றைக்கு சுமார் பதிநான்கு ஆண்டுகளுக்கு முன்னர் திறந்துவைக்கப்பட்டதென்பதையும்;

(ii) திறந்து வைக்கப்பட்ட நாளிலிருந்து பயன்படுத்தப்படாமையின் காரணத்தினால் 12 விற்பனைக் கூடங்கள் அடங்கிய குறித்த கட்டடம் அழிவடைந்து வருகிறது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பேரூந்து தரிப்பு நிலையத்தையும் விற்பனைக் கூடங்களையும் பயன்படுத்தாது கைவிட்டுள்ளமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி கட்டடத்தை மீண்டும் புனரமைத்து மக்கள் உரிமைக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2280/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச பாடசாலை ஆசிரியர்களின் தொழில்சார் அபிவிருத்தியை உருவாக்கும் பொருட்டு பயிற்சி நிலையங்கள் எந்த ஆண்டில் தாபிக்கப்பட்டதென்பதையும்;

(ii) நாடளாவிய ரீதியில் தாபிக்கப்பட்டுள்ள மேற்படி நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) ஆரம்பிக்கப்பட்ட ஆண்டிலிருந்து மேற்படி நிலையங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள முகாமையாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி முகாமையாளர்கள் கல்வியலாளர்கள் சேவைக்கு உள்வாங்கப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(v) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு முதல் இற்றைவரை மேற்படி நிலையங்களின் மூலம் ஆசிரியர்களுக்கு தொழில்சார் பயிற்சியை பெற்றுக்கொடுப்பதற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள்;

(ii) ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு முதல் இற்றைவரை மேற்படி நிலையங்களின் மூலமாக பயிற்சிகள் வழங்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை;

ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2316/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தபால் திணைக்களத்திலுள்ள தொழிலாளர் எண்ணிக்கையையும்;

(ii) தரமான தபால் சேவைகளை வழங்குவதற்கு பணியாட்தொகுதிக்குத் தேவைப்படும் அங்கத்தவர்களின் எண்ணிக்கையையும்;

(iii) மாவட்ட அடிப்படையில் தபால் திணைக்களத்திற்குத் தேவைப்படும் தொழிலாளர்களின் எண்ணிக்கையையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) தபால் தரம்பிரித்தலை விரைவுபடுத்துவதற்கு தபால் சேவையை தன்னியக்கமயமாக்க முடியுமா என்பதையும்;

(ii) கடந்த இரு வருடங்களில் தபால் திணைக்களத்தின் உண்மைச் செலவினத்தை விட வருமானம் குறைவாகக் காணப்பட்டமையால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை வெவ்வேறாகவும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2341/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கு கொள்கைத் தொடர் மூலமாக மதுபானம், போதைப்பொருள் மற்றும் போதையை ஏற்படுத்துகின்ற ஔடத வகைகளின் பாவனையின்பால் இளைஞர்கள் ஈடுபடுவதை தடுப்பதற்காக நாடளாவிய வேலைத் திட்டமொன்றை அமுலாக்க வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) தற்போது மேற்படி வேலைகள் அமுலாக்கப்பட்டிருப்பின் அதன் முன்னேற்றம் யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2012 நவர்பர் 30, வெள்ளிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1946/ '11

கௌரவ புத்திக பதிரண,— பாரம்பரிய கைத்தொழில்கள், சிறு தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இற்றைக்கு சுமார் ஓராண்டு காலம் தொடக்கம் கேகாலை மாவட்டத்தில் றம்புக்கனையில் அமைந்துள்ள வெள்ளைத் தும்புத் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளதன் காரணமாக பிரதேசத்திலுள்ள பெருந்தொகையான மக்களுக்கு தொழில்களின்றி பாரிய பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்க நேரிட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி வெள்ளைத் தும்புத் தொழிற்சாலைசார்ந்த நிலையத்தினால் வேலையில்லாத இளைஞர் யுவதிகளை சுயதொழிலில் ஈடுபடுத்தும் நோக்குடன் பயிற்சிப் பாடநெறியொன்று நடத்தப்பட்டு வந்ததென்பதையும்;

(iii) புத்தாக்கங்களுக்காக சனாதிபதி விருதினைக் கூட வென்றெடுத்துள்ள மேற்படி நிறுவனம் மூடப்பட்டிருப்பதானது தேசிய ரீதியில் பாரியதொரு தவறாகும் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) ஆமெனில், மீண்டும் இத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுமா என்பதையும்;

(ii) அதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2281/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பல்வேறு தனியார் நிறுவனங்கள் ஊடாக அரச துறையில் கருமமாற்றுகின்ற மனிதவலுசார் ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவர்களுக்கு வழங்கப்படும் ஆகக்கூடிய நாளாந்த அல்லது மாதாந்த சம்பளம்/கொடுப்பனவு மற்றும் சம்பந்தப்பட்ட பதவி யாதென்பதையும்;

(iii) இவர்களுக்கு வழங்கப்படும் ஆகக்குறைந்த நாளாந்த அல்லது மாதாந்த சம்பளம்/கொடுப்பனவு மற்றும் சம்பந்தப்பட்ட பதவி யாதென்பதையம்;

(iv) இவர்களுக்கு வழங்கப்படும் சம்பளம்/கொடுப்பனவு தற்போதைய பொருளாதார நிலைமைகளின் கீழ் போதாத காரணத்தால் மேற்படி சம்பளம்/ கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்கு நடவடிக்கையெடுப்பாரா என்பதையும்;

(v) ஆமெனில், இவ்விடயம் எக்காலகட்டத்தில் மேற்கொள்ளப்படும் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி ஊழியர்களில் 2005 ஆண்டு முதல் இற்றைவரை அரச துறைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி மனிதவலுசார் ஊழியர்கள் அனைவருக்கும் அல்லது ஒரு பகுதியினருக்கு அரச துறையில் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு எதிர்வரும் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், எக்காலகட்டத்தில் என்பதையும்;

(iv) ஆட்சேர்ப்பு செய்யப்படும் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2318/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 ஆம் ஆண்டில்,

(i) நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரினால் வீடுகள் கட்டுவதில் செலவழித்த தொகையையும்;

(ii) கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையையும்;

(iii) அவ்வீடுகள் கட்டப்பட்டிருக்கும் அமைவிடங்களையும்

அவர் கூறுவாரா?

(ஆ) 2012 ஆம் ஆண்டில்,

(i) வீடமைத்தலுக்காக ஒதுக்கப்பட்ட தொகையையும்;

(ii) அதே விடயத்தில் இற்றைவரை செலவழித்த தொகையையும்;

(iii) புதிதாக கட்டப்பட்ட வீடுகளின் அமைவிடங்களையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2343/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கு, கொள்கைத் திட்டத்தின் மூலம் இலங்கையில் பிறக்கின்ற அனைத்து பிள்ளைகளினதும் உயிர் தரவுக் கோவையொன்று இப்பிள்ளையின் நிரந்தர வதிவிடத்திற்குரிய 'ஜனசபா' செயலகத்தில் பேணிவரப்படவேண்டுமென முன்மொழியப்பட்டள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போது இவ்வேலைத் திட்டம் செயற்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் இச் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2012 திசெம்பர் 03, திங்கட்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1947/ '11

கௌரவ புத்திக பதிரண,— கைத்தொழில், வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறை மாவட்டத்தில் திஹகொட பிரதேச செயலக ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள கபுதூவ நெசவுக் கைத்தொழில் நிலையக் கட்டடமும் அதன் உபகரணங்களும் தற்போது அழிவடைந்து வருகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அங்குள்ள வளங்களைப் பயன்படுத்தி மேற்படி பயிற்சி நிலையத்தை மீண்டும் சீரான நிலைக்கு கொண்டுவர நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) இன்றேல், அந்த இடத்தை வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிலையமொன்றுக்கு அல்லது வேறு ஏதேனும் அலுவலொன்றுக்குப் பயன்படுத்த நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2320/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 சனவரி 15 ஆம் திகதி மரக்கறி கொண்டு செல்வதற்காக நடைமுறைப்படுத்தப்பட்ட கூடை முறைமை எவ்வாறு செயற்படுகின்றது என்பதையும்;

(ii) கூடை முறைமை அறிமுகம் செய்யப்பட்ட பின்னர் பழுதடையும் மரக்கறிகளை பாதுகாக்கும் நூற்றுவீதம் மற்றும் அதன் ரூபா பெறுமதி ஆகியவற்றையும்;

(iii) மேற்படி சேமிப்பு எவ்வாறு கணக்காய்வு செய்யப்படுகின்றது என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) கூடை முறைமையின் அமுல்படுத்தலின் காரணமாக மரக்கறி விலைகள் குறைந்துள்ளனவா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், ஒப்புறுதிப்படு சான்றுகளுடன் குறைக்கப்பட்ட விலை எவ்வளவு என்பதையும்;

(iii) கூடைகளை திரும்பவும் விவசாயிகளிடம் எடுத்துச் செல்லும் செலவினத்தைப் பொறுப்பேற்கும் ஆள் யார் என்பதையும்;

(iv) ஒரு வருடத்திற்கு விவசாயிகளிடம் கூடைகளைத் திரும்ப அனுப்பும் போக்குவரத்து செலவினம் எவ்வளவு என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2355/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் அரசாங்க வைத்தியசாலைகளில் பணியாட்டொகுதியினர் கடமைக்கு சமூகமளிப்பதை பதிவதற்காக 2006 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் தாபிக்கப்பட்ட கைவிரல் அடையாள இயந்திரங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கும் தாபிப்பதற்கும் ஏற்பட்ட செலவு யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கைவிரல் அடையாள இயந்திரங்களைக் கொள்வனவு செய்கையில் கேள்விப் பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், கேள்விப் பத்திரங்களை சமர்ப்பித்த நிறுவனங்கள் மற்றும் குறித்த ஒவ்வொரு நிறுவனமும் முன்வைத்த விலைகள் யாவை;

(iii) கைவிரல் அடையாள இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்ட நிறுவனத்தின் பெயர் யாது;

(iv) ஒரு இயந்திரத்தின் விலை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தாபிக்கப்பட்ட கைவிரல் அடையாள இயந்திரங்களில் தற்போது இயங்குகின்ற இயந்திரங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி இயந்திரங்களுக்காக செலவிடப்பட்ட பாரிய நிதிக்கு ஒப்பீட்டளவில் போதியளவு நன்மைகள் கிடைத்துள்ளதா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2372/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு 07, ரொரின்ரனில் 187ஆம் தோட்டத்தில் குடிசை வீட்டுரிமையாளர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களது வீடுகளுக்காக நிரந்தர உரிமை அல்லது உரிமப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், இவர்கள் மேற்படி உரிமையை அனுபவித்து வருகின்ற கால எல்லை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி வீடுகளை உடைத்து அகற்றுவதற்காக அரசாங்கம் தீர்மானமொன்றை எடுத்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், இவர்களுக்கு அதே இடத்தில் அல்லது வேறு ஒரு இடத்தில் புதிய வீடுகள் பெற்றுக்கொடுகப்படுமா என்பதையும்;

(iii) வேறொரு இடத்தில் புதிய வீடுகள் பெற்றுக்கொடுக்கப்படுமெனில் அந்த இடம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) புதிய வீடமைப்புத் தொகுதியொன்றை நிர்மாணித்து அந்த வீடுகளை பணம் அறவிடாமல் 187 ஆம் தோட்டத்தின் குடியிருப்பாளர்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கான ஒரு முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி பிரேரணை இதுவரை நடைமுறைப் படுத்தப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

## 2012 திசெம்பர் 04, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1948/ '11

கௌரவ புத்திக பதிரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனறாகலை பொது மருத்துவமனையில் போதியளவு கட்டடங்கள், மருத்துவமனைக் கட்டில்கள் மற்றும் ஏனைய பௌதீக வளங்கள் இல்லை என்பதையும்;

(ii) இந்நிலைமை காரணமாக பிரதேசத்திலுள்ள நோயாளர்கள் கடும் இன்னல்களுக்கு ஆளாகியுள்ளார்கள் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி மருத்துவமனைக்குத் தேவையான வளங்களைப் பெற்றுக்கொடுக்க துரிதமாக நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனின், ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை யாதென்பதையும்;

(iv) நிதியங்கள் இருப்பின், கட்டடங்களை நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படும் தேதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2321/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உலகிலுள்ள பல நாடுகளில் பயன்படுத்தப்படுகின்ற மின்னியல் வாக்கெடுப்பு முறையை இலங்கையிலும் நடைமுறைப்படுத்துதல் சாத்தியமானதா என்பதையும்;

(ii) மிகக் குறைந்தளவு தவறுகளுடன் மின்னியல் வாக்கெடுப்பு முறையை நடைமுறைப்படுத்திய இந்தியாவின் அனுபவத்தைக் கருத்திற்கொண்டு இலங்கையில் இதனை நடைமுறைப்படுத்துவதற்கு இந்தியாவின் உதவியைப் பெற்றுக்கொள்ள முடியுமா என்பதையும்;

(iii) ஒரு வருடத்தின் ஒரு மாதத்தில் குறிப்பிட்ட பதிவுகளை இற்றைப்படுத்துவதற்குப் பதிலாக ஒரு திறந்த தேருநர் பதிவு முறையை இலங்கையில் தாபிக்க முடியுமா என்பதையும்;

(iv) கணினி மயப்படுத்தப்பட்ட தேருநர்கள் பதிவிடாப்பை அரசியல் கட்சிகளுக்கு வழங்க முடியுமா என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2357/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் சுகாதார எழுதுவினைஞராக சேவையாற்றி 2008.12.09 ஆம் திகதி ஓய்வுபெற்றுள்ள மாத்தறை, கோட்டேகொடை, பொஹொசத்துகொடை, "செவன" இல்லத்தில் வசிக்கின்ற திரு. ஏ.கே.ஏ. பியதாச கொடிதுவக்குவிற்கு ஓய்வூதியம், ஓய்வூதியப் பணிக்கொடை அல்லது வேறு கொடுப்பனவுகள் எதுவும் இதுவரை செலுத்தப்படவில்லை என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) திரு. கொடிதுவக்குவிற்கு ஓய்வூதியம் செலுத்துதல் தாமதமடைவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஓய்வூதியத்தைச் செலுத்துதல் தொடர்பான நடவடிக்கைகளை தவறவிடுகின்ற அலுவலர்ளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) திரு. கொடிதுவக்குவின் ஓய்வூதியத்தைத் துரிதமாகச் செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2374/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சிவில், விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) விமான நிலையங்கள் மற்றும் விமானச் சேவைகள் (ஸ்ரீலங்கா) கம்பனியின் தவிசாளரும் பணிப்பாளர்களினதும்,

(i) பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) கல்வி மற்றும் தொழில்வாண்மைத் தகைமைகள் யாவை என்பதையும்;

(iii) சம்பளம், ஊதியம் மற்றும் படிகளின் பெறுமதிகள் யாவை என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி கம்பனியின் தவிசாளருக்கும் பணிப்பாளர் சபையினருக்கும் சம்பளம், ஊதியம் அல்லது படிகள்

(i) கடந்த காலப்பகுதியில் அதிகரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அதிகரிக்கப்பட்டிருப்பின் அது மேற்கொள்ளப்பட்ட திகதி யாது என்பதையும்;

(iii) அவ்வாறு அதிகரிக்க முன்னர் நிலவிய அவற்றின் பெறுமதிகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2012 திசெம்பர் 05, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1950/ '11

கௌரவ புத்திக பதிரண,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 ஆம் ஆண்டில் அனுராதபுரம் மாவட்டத்தின் ஒயாமடுவ பிரதேசத்தில் நடைபெற்ற "தயட்ட கிருல" தேசிய கண்காட்சியுடன் இணைந்ததாக ரஜரட்ட பிரதேசத்தின் 15 ஊடகவியலாளர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கும் வேலைத்திட்டமொன்று நடைபெற்றதென்பதையும்;

(ii) வீடு பெறுநர்களைத் தெரிவு செய்கின்றபோது பகிரங்கத் தன்மையற்ற விதத்தில் செயலாற்றியுள்ளதாக ஊடகவியலாளர்கள் குற்றஞ் சாட்டுகின்றனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீடு பெறுனர்களை தெரிவு செய்வதற்காக பின்பற்றப்பட்ட முறையியல் யாதென்பதையும்;

(ii) மேற்படி வேலைத்திட்டத்தின் மூலம் ஊடகவியலாளர்களுக்கு வீடுகளை வழங்குகின்றபோது அநீதி ஏதும் இடம்பெற்றிருப்பின் அந்நிலைமையை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படுமெனில், அதற்காக பயன்படுத்தப்படும் முறையியல் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2322/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010, 2011, மற்றும் 2012 ஆகிய வருடங்களில் 9 மாகாண சபைகளுக்கும் ஒதுக்கப்பட்ட மொத்த நிதியையும்;

(ii) மேற்குறிப்பிடப்பட்ட வருடங்களில் ஒவ்வொரு மாகாண சபையிலும் நிதி ஒதுக்கப்பட்ட அமைச்சுக்களைத் தனித்தனியாகவும்

அவர் கூறுவாரா?

(ஆ) 2010, 2011, மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில்,

(i) ஒவ்வொரு மாகாண சபையினாலும் அரசாங்க ஒதுக்கீடுகளிலிருந்து செலவிடப்பட்ட தொகையையும்;

(ii) மாகாண சபையினால் ஈட்டப்பட்ட பணத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட செலவினத்தின் பெறுமதியையும்;

(iii) அரசாங்க கொடையாகவும், வருமானப் பங்காகவும் ஒவ்வொரு மாகாண சபையினாலும் பெறப்பட்ட தொகையையும்;

(iii) ஒவ்வொரு மாகாண சபையினதும் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறைத் தேவைப்பாடுகள் எவ்வாறு நிவர்த்தி செய்யப்பட்டன என்பதையும்;

தனித்தனயாக அவர் கூறுவாரா?

(இ) சொல்லப்பட்ட மாகாண சபைகளுக்கு மத்திய அரசாங்கத்திடம் இருந்த அதிகாரங்கள் தரமாகப் பெறப்பட்டதன் பின்னர்அவற்றின் வருமான சேகரிப்பு முறைமை முன்னேற்றமடைந்துள்ளதா என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2363/ ’12

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஆதார வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்டுள்ள திஸ்ஸமஹாராம வைத்தியசாலையில்,

(i) சத்திரசிகிச்சைக் கூடம், இரத்த வங்கி, எக்ஸ் கதிர் பிரிவு மற்றும் ஆய்வுகூட வசதிகள் தாபிக்கப்பட்டள்ளனவா;

(ii) ஈ.சீ.ஜீ. பெறுவதற்கான நவீன தொழில்நுட்ப உபகரணங்கள் இருக்கின்றனவா;

(iii) கர்ப்பிணித் தாய்மார்களுக்கான சிகிச்சை நிலையம் அமைக்கப்பட்டு அதற்கான அவசியமான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளனவா;

(iv) சத்திரசிகிச்சைக் கூடங்கள் போன்ற தனித்துவமான கூறுகள் வளிச்சீராக்கம் செய்யப்பட்டுள்ளனவா;

(v) போதுமான அளவு உபகரணங்களும் மருந்துப் பொருட்களும் உள்ளனவா;

(vi) சுத்தம் பேணும் பொருட்டு சுற்றாடலை வகுத்தமைத்து அதற்கு அவசியமான வடிகால் தொகுதிகள் அமைக்கப்பட்டுள்ளனவா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) திஸ்ஸமஹாராம வைத்தியசாலையில் தற்போதுள்ள வடிகால் தொகுதியில் டெங்குக் குடம்பிகள் பரவலாக உள்ளனவென்பதையும்;

(ii) ஆதார வைத்தியசாலையொன்றுக்கு அவசியமான தொலைபேசி நிலையமொன்று இற்றைவரை அங்கு நிறுவப்படவில்லையென்பதையும்

அவர் அறிவாரா?

(இ) திஸ்ஸமஹாராம வைத்தியசாலையின் இந்த அவசியப்பாடுகளை நிவர்த்தி செய்ய எவ்வளவு காலம் எடுக்குமென அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2385/ ’12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அநுராதபுரத்தில் நடைபெற்ற 2012 சுதந்திர தின விழாவின் போது கலந்து கொண்ட நடனக் கலைஞர்கள் எந்த நிறுவனத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டார்கள் என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்கூறப்பட்ட சுதந்திர தின விழாவில் நடனக் கலைஞர்களாக எத்தனை பேர் கலந்துகொண்டார்கள் என்பதையும்;

(ii) சுதந்திர தின விழா நடைபெற்ற தினத்தில் அவர்களுக்கு பழுதடைந்த உணவுப் பொதிகள் வழங்கப்பட்டதா என்பதையும்;

(iii) அவ்வாறெனின் அந்த உணவினை வழங்கியவர் யார் என்பதையும்;

(iv) அந்த நடனக் கலைஞர்களுக்கு வழங்கப்பட்ட பழுதடைந்த உணவுக்குப் பதிலாக மாற்று தீர்வினை வழங்குவது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பதையும்

(v) அந்த வழங்குனருக்கு மேற்கூறிய உணவுக்கான அனுப்பல் கட்டளையை வழங்கியவர் யார் என்பதையும்;

(vi) பழுதடைந்த உணவினை வழங்கியமை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பதையும்

அவர் இச்சசபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2012 திசெம்பர் 06, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1952/ '11

கௌரவ புத்திக பதிரண,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறையிலிருந்து கதிர்காமம் வரையிலான புகையிரத வீதியின் நிர்மாணப் பணிகள் பலமுறை ஆரம்பிக்கப்பட்ட போதிலும், இன்று வரை அதன் பணிகள் நிறைவு செய்யப்படவில்லை என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மாத்தறையிலிருந்து கதிர்காமம் வரையான புகையிரத வீதியின் நிர்மாணப் பணிகளுக்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி புகையிரத வீதியின் பணிகளுக்காக நிதி வழங்கும் உள்நாட்டு அல்லது சர்வதேச நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மாத்தறை- கதிர்காமம் புகையிரத வீதியின் நிர்மாணப் பணிகள் தாமதமடைவதற்கான காரணங்களை கண்டறிந்து துரிதமாக அதன் பணிகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2323/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டிலுள்ள பதிவுசெய்யப்பட்ட விளையாட்டு அமைப்புகளின் எண்ணிக்கையையும்;

(ii) மேற்கூறப்பட்ட விளையாட்டு அமைப்புகளுக்கு சட்டரீதியாக தெரிவுசெய்யப்பட்ட தலைவர்களின் பெயர்களையும்;

(iii) இவ் விளையாட்டு அமைப்புகளுக்கு தலைமை வகிக்கும் அரசியல்வாதிகளின் பெயர்களையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) சட்டத்தினால் தேவைப்படுத்தப்படுகின்றவாறு விளையாட்டு அமைப்புகளின் கணக்குகள் வருடந்தோறும் சமர்ப்பிக்கப்படுகின்றனவா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், 2010 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததா என்பதையும்;

(iii) கணக்குகளை சம்பந்தப்பட்ட அதிகார சபைக்கு சமர்ப்பிக்காதிருக்கும் விளையாட்டு அமைப்புகளின் பெயர்களையும்;

(iv) (ஆ) (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள, தவறிழைத்துள்ள விளையாட்டு அமைப்புக்களின் மீது விதிக்கப்பட்ட அபராதத்தையும்;

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2367/ ’12

கௌரவ சஜித் பிரேமதாச,— சிவில், விமானசேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கா விமானக் கம்பனிக்கு புதிதாக விமானங்கள் பெற்றுக்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில் அதற்காக கேள்விப் பத்திரம் கோரப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இன்றேல், வேறு விதத்தில் விமானங்களை பெறுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

(iv) விமானங்கள் கொள்வனவு செய்யப்படுமெனில் அதற்கு செலவாகின்ற மொத்தப் பணம் எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி பணம் பெறப்படுவது எவ்வாறென்பதையும்;

(vi) விமானங்களைக் கொள்வனவு செய்வது சம்பந்தமாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழுவொன்று நியமிக்கப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலண்டன் ஹீத்ரோ விமான நிலையத்தில் ஸ்ரீலங்கா விமானக் கம்பனியின் விமானங்களை தரித்து வைப்பதற்கு வழங்கப்பட்டுள்ள அனுமதியை (Slots) குத்தகைக்கு வழங்குவதற்கு அல்லது விற்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) எமிரேட்ஸ் விமானக் கம்பனியிடமிருந்து வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் விமானக் கம்பனி பொறுப்பேற்கப்பட்ட திகதியிலிருந்து இற்றைவரை ஸ்ரீலங்கன் கேட்டரின் கம்பனி ஈட்டியுள்ள இலாபம் அல்லது நட்டம் எவ்வளவென்பதையும்;

(iii) ஸ்ரீலங்கன் விமானக் கம்பனியின் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iv) அரசாங்கத்தின் நிதி ஏற்பாடுகளை விடுவிக்காது மேற்படி கம்பனியை நடத்திச் செல்வதற்கான மாற்று வழிமுறைகள் பற்றி அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2410/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் தேசிய பிரச்சினைக்கு 13 வது அரசியலமைப்புத் திருத்தத்திற்கும் அப்பால் சென்ற தீர்வொன்றைப் பெற்றுக்கொடுப்பதாக இலங்கையின் சனாதிபதியவர்களால் கூறப்பட்டதாக இந்திய வெளிநாட்டலுவல்கள் அமைச்சரால் அண்மையில் வெளியிடப்பட்ட கூற்றில் உண்மையுள்ளதா;

(ii) மேற்படி தேசிய பிரச்சினை சம்பந்தமாக அரசாங்கத்தினால் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(iii) அவ்வாறெனில், 13 வது திருத்தத்திற்கு மேலதிகமாக வழங்கப்படுகின்ற ஏனைய பிரேரணைகள் யாவை;

(iv) இதற்கு அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்துக் கட்சிகளினதும் அங்கீகாரம் கிடைத்துள்ளதா;

(v) மேற்படி பிரேரணைகள் அமுலாக்கப்படும் திகதி யாது;

(vi) இந்திய வெளியுறவு அமைச்சரின் மேற்படி (அ) (ii) இல் குறிப்பிடப்பட்ட கூற்று உண்மையல்லவெனில், அது சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2012 திசெம்பர் 07, வெள்ளிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1954/ '11

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தில் அம்பாறை நகரசபைக்குச் சொந்தமான அரச வாடி வீடு உரிய விதத்தில் புனரமைப்பு செய்யப்படாமையினால் நாளுக்கு நாள் அழிவடைந்து வருகின்றதென்பதையும்;

(ii) சுற்றுலாத் துறையின் மேம்பாட்டைத் தொடர்ந்து மேற்படி வாடி வீட்டை உரிய விதத்தில் புனரமைப்பதன் மூலம் பெருமளவு வருமானத்தை ஈட்ட முடியும் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) அம்பாறை வாடி வீட்டை புனரமைப்பதற்காக தற்போது திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அதன் படி வாடி வீட்டை அபிவிருத்தி செய்வதற்கான பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2359/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) செலிங்கோ குழுமத்தில் நிதி நெருக்கடி நிலவுவது பற்றிய முதல் அறிகுறி எப்போது அறிக்கையிடப்பட்டது என்பதையும்;

(ii) மேற்கூறிய குழுமத்தில் நிலவும் பாரதூரமான நிதி நெருக்கடி பற்றி இலங்கை மத்திய வங்கிக்கு எப்போது உத்தியோகபூர்வமாக அறிக்கையிடப்பட்டது என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) சிலிங்கோ குழுமத்தின் கம்பனி ஒவ்வொன்றின் அடிப்படையிலும்,

(i) சொத்துகள் விற்கப்பட்டால் வைப்பாளர்களுக்கு செலுத்தப்படக் கூடிய தொகையை வெவ்வேறாகவும்;

(ii) சொத்துக்களின் விற்பனையினால் அவை பெற்றுக்கொண்ட தொகையினை வெவ்வேறாகவும்;

(iii) இற்றைவரையில் வைப்பாளர்களுக்கு செலுத்தப்பட்ட தொகையை சம்பந்தப்பட்ட வைப்பாளர்களுக்கு மீதித்தொகையைச் செலுத்துவதற்குத் தேவைப்படும் காலத்தையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) இவ்வகையான நிதி நெருக்கடி நிகழ்வதற்கு பொறுப்பு மத்திய வங்கியா என்பதையும்;

(ii) மத்திய வங்கியின் தற்போதைய ஆளுனரின் பெயரையும், மேலும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட நிதி நெருக்கடி நிகழ்ந்த போது மத்திய வங்கியின் ஆளுனராக இருந்தவரின் பெயரையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2412/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012.02.11 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்ததொரு திகதியில் மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் விலையேற்றத்தின்படி விலை அதிகரிக்கப்பட்ட ஒவ்வொரு எரிபொருள் வகை மற்றும் அவற்றின் அதிகரிக்கப்பட்ட பணத்தொகை தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) மேற்படி விலை அதிகரிப்புக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி விலை அதிகரிப்பை அங்கீகரித்த அதிகாரி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி எரிபொருள் விலை அதிகரிப்பானது கடந்த காலத்தில் நடைபெற்ற ஹெஜின் கொடுக்கல் வாங்கலினால் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடுசெய்வதற்காக மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(ii) இன்றேல், மேற்படி விலை அதிகரிப்பின் மூலமாக நிறைவேற்றிக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட விடயங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) பொதுமக்களுக்கு தாங்கிக் கொள்ள முடியாதவாறு எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டதன் மூலமாக எரிபொருள் மீது தங்கியிருக்கின்ற ஒட்டுமொத்தப் பொருளாதாரத்திற்கும் சேதம் ஏற்படாதா என்பதையும்;

(ii) மேற்படி எரிபொருள் விலை அதிகரிப்பை திருத்தி நுகர்வோருக்கு நிவாரணம் கிடைக்கும் விதத்தில் விலையை குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2429/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— கமநல சேவைகள், வன சீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் விவசாயத்தில் ஈடுபடும் அனைத்து விவசாயிகளுக்கும் வாழ்க்கைச் செலவு மானியமொன்றை வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அதனை நடைமுறைப்படுத்த எடுக்கப்படும் செயன்முறை யாதென்பதையும்;

(iii) விவசாயி ஒருவருக்கு வழங்க எதிர்பார்க்கப்படும் மானியத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) அந்தத் தொகையைக் கணிப்பீடு செய்ய பயன்படுத்தப்படும் அளவுகோள் யாதன்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2012 திசெம்பர் 08, சனிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1956/ '11

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(இ) (i) மாத்தறை மாவட்டத்தின் ஹக்மண பிரதேச சபைக்காக நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டடம் திறந்துவைக்கப்பட்டு இரண்டு வருடங்கள் கழிவதற்கு முன்பாக சுவர்களில் வெடிப்பு ஏற்பட்டு அபாயகரமான நிலைமையை அடைந்து வருகின்றதென்பதையும்;

(ii) கட்டட நிர்மாணிப்பு உரிய தரநியமமின்றி மேற்கொள்ளப்பட்டமையே இந்நிலைமைக்கு காரணம் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கட்டடத்தை நிர்மாணிக்கும் பொருட்டு ஒதுக்கப்பட்ட பணத்தொகை யாது;

(ii) அதன் நிர்மாணப் பணிகளுக்காக கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டனவா;

(iii) ஆமெனில், கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்த ஒவ்வொரு விண்ணப்பதாரி யினதும் பெயர் மற்றும் முன்வைத்த பணத்தொகை தனித்தனியாக யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) ஹக்மன பிரதேச சபைக் கட்டடத்தின் நிர்மாணப் பணிகளை மேற்கொண்ட ஒப்பந்தகாரரின் பெயர் யாது;

(ii) இவருக்குப் பணம் செலுத்துவதற்கு முன்னர் நிர்மாணிப்பு சம்பந்தமாக தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அறிக்கை பெறப்பட்டதா;

(iii) சம்பந்தப்பட்ட ஒப்பந்தகாரர் மூலமாக மீண்டும் அக்கட்டடத்தைப் புனரமைக்க நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2360/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) செலிங்கோ கம்பனிகளின் குழுமத்தைப் போன்று நிதி நெருக்கடிக்குள்ளான கம்பனிகளின் எண்ணிக்கை மற்றும் பெயர்களையும்;

(ii) இன்றுள்ளவாறு அக்கம்பனிகளின் நிலைமையையும்;

(iii) நிதி நெருக்கடிக்குள்ளான, ஒவ்வொரு கம்பனியாலும் அதன் வைப்பீட்டாளர்களுக்கு வைப்பீடுகளுக்கு எதிராக செலுத்தப்பட்ட தொகையினை வெவ்வேறாகவும்; மற்றும்

(iv) மிகுதிப் பணம் எப்போது செலுத்தப்படும் என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) இக்கம்பனிகளுக்குப் புத்தூக்கம் அளிப்பதற்கு நியமிக்கப்பட்ட ஒழித்துக்கட்டுநர்களின் அல்லது அறிவுரையாளர்களின் பெயர்களையும்;

(ii) மேற்குறிப்பிட்ட கம்பனிகளுக்கு ஏற்பட்ட ஏதாவது பிரச்சினைகளில் இருந்து மீளுவதற்காக அரசாங்கம் உதவியுள்ளதா என்பதையும்; மற்றும்

(iii) அவ்வாறெனில், அது எவ்வாறு செய்யப்பட்டது என்பதையும் மற்றும் அவ்வுதவிகளின் பணப் பெறுமதியையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) மேற்குறிப்பிட்ட கம்பனிகளுக்கு ஏற்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக விழிப்பாக இராது தங்களின் கவனயீனத்திற்கு மத்திய வங்கி பொறுப்பேற்க வேண்டுமா என்பதையும்; மற்றும்

(ii) இன்றேல் மத்திய வங்கியிலிருந்து எதிர்பார்க்கப்படும் மேற்பார்வை வங்கியின் தன்மையையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2414/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்க ஆஸ்பத்திரிகளுக்காக சத்திர சிகிச்சை கையுறைகளை இறக்குமதி செய்கின்ற கம்பனிகள் யாவையென்பதையும்,

(ii) மேற்படி ஒரு கம்பனியினால் இறக்குமதி செய்யப்பட்டு அதிக விலை குறிக்கப்பட்ட கையுறைகள் தொகையொன்றை அரசாங்க ஆஸ்பத்திரிகளுக்கு வழங்குவதற்காக அனுமதியளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) இவ்வாறு அதிக விலைக்கு கையுறைகளை விற்பனை செய்கின்ற மேற்படி கம்பனியின் பெயர் யாதென்பதையம்,

(iv) அதன் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி கம்பனியின் கையுறைகள் தொகையை கொள்வனவு செய்வதை மருத்துவ வழங்கல் பிரிவு நிராகரித்ததா என்பதையும்;

(ii) மேற்படி கையுறைகள் தொகை அங்கீகரிக்கப்பட்ட கேள்விப் பத்திர நடைமுறைக்கமைய கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், இதற்குரிய ஆவணங்களை சபைக்குச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) இதற்காக அனுமதியளித்த அதிகாரம் வாய்ந்த உத்தியோகத்தர் யார் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையியல்களுக்குப் புறம்பாக மேற்படி கையுறைகளை கொள்வனவு செய்யும் கொடுக்கல் வாங்கல் நடைபெற்றிருப்பின் அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) அத்தகைய கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளப்பட்டிருப்பின் அதனை மேற்கொண்டவர்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2507/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வட மாகாணத்தின் சம்பத்நுவர பிதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள எத்தாவெட்டுனவெவ வித்தியாலயத்தில் பல பௌதீக மற்றும் மனித வளப் பற்றாக் குறைகள் காணப்படுகின்றன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) எத்தாவெட்டுனவெவ வித்தியாலயத்தில் காணப்படுகின்ற பௌதீக மற்றும் மனித வளங்களுக்கான குறைபாடுகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி குறைப்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரார என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்காக எடுக்கும் காலம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?